# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஜனவரி-2016
பருவம் 2 புனல் 16

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20



## வேட்டி, சேலை

## இந்து -இந்திய அடையாளம்



# திராவிடர் பண்பாட்டு நாட்காட்டி

பண்பாட்டுத் தளத்தில் அக்கறை செலுத்தாமல் அரசியல் தளத்தில் மட்டுமே போராடிக்கொண்டிருப்பது சமுதாய விடுதலைக்குப் பயன்படாது என்பது பெரியாரியலின் பாலபாடம்.

சராசரி மனிதனின் வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் ஏற்றத்தாழ்வுகளை உறுதிப்படுத்தும் செயல்களும், அறிவுக்குப் பொருந்தாத செயல்களும் பண்பாடு, பழக்க வழக்கங்கள் என்ற பெயரில் நம்மை அடிமைப்படுத்தி வருகின்றன. மதங்கள் அவற்றை திணிக்கின்றன. இவை அனைத்துக்கும் எதிராகப் பிறப்பிலிருந்து இறப்புவரை மனிதன் பின்பற்றத்தக்க அறிவுப்பூர்வமான - ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான - மாற்றத்துக்கு இடமளிக்கும் பண்பாட்டைத் தோழர் பெரியார் சிந்தித்தார். தனது இலட்சக்கணக்கான தோழர்களின் வாழ்வின் வழியே செயல்படுத்தியும் காட்டினார்.

ஆனால், இந்தத்தலைமுறைத் தோழர்கள், தனது பிள்ளைகளுக்கு மொட்டை அடிப்பது, காதுகுத்து நடத்துவது, மொய் வாங்குவது, பூப்புனித நீராட்டுவிழா நடத்துவது, சமையலறையில் சுடுதண்ணீர் வைக்கக்கூடத் தெரியாமல் ஆண் பிள்ளைகளை வளர்ப்பது, வாஸ்து பார்த்து வீடு கட்டுவது, குலதெய்வத்துக்கு வரி கொடுப்பது, ஜாதிக்குள்ளேயே திருமணம் செய்து கொள்வது, பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கிறேன் என்ற பெயரில் தாலி கட்டுவது, தன் உடன் பிறந்த சகோதரிகளுக்கு சொத்துரிமையை மறுப்பது என சராசரி மதவாதிகளைப் போலவே வாழ்ந்து வருகின்றனர். ( காட்டாறு குழு உட்பட )

பெரியார் இயக்கத் தோழர்கள் என்றால் கருப்புச்சட்டை போட்டுக்கொள்வது, இடஒதுக்கீட்டுக்காகப் போராடுவது, பி.ஜே.பியை எதிர்ப்பது, ஈழவிடுதலைக்காகப் போராடுவது, கூடங்குளம், மீத்தேன் திட்டங்களுக்கு எதிராகப் போராடுவது என்பவை போன்ற அடையாளங்கள்தான் இந்தத் தலை முறையிடம் இருக்கிறது. இவையெல்லாம் மிகவும் அவசியமான போராட்டங்கள்தான். இவை வீதியில் இறங்கிப் போராட வேண்டியவை. ஆனால் பெரியாரின் அடிப்படைப் போராட்டங்கள் வீட்டுக்குள்ளேயே தொடங்க வேண்டியவை.

பெரியாரின் அடிப்படைப் போராட்டங்களை - பண் பாட்டுப்புரட்சியை அடுத்த தலைமுறைக்கு அறிமுகப் படுத்த வேண்டியதைக் கடமையாக எண்ணி, காட்டாறு, திராவிடர் பண்பாட்டு நாட்காட்டியை வடிவமைத்துள்ளது.

தொடர்ச்சி பின் அட்டை உள்பக்கம்



உலகத்திலேயே
மானங்கெட்ட மக்களில் நெம்பர் 1
இந்தப் பத்திரிக்கை நிருபர்கள்தான்.
எவ்வளவு அயோக்கித்தனம் செய்ய
வேண்டுமோ அவ்வளவு அயோக்கியத்
தனங்களையும் செய்கிறார்கள்.

பொள்ளாச்சி **விஜயராகவன்**

# ஊடகங்களில் வகுப்புவாரி உரிமையைச் செயல்படுத்த வேண்டும்

கலகக்காரத் தோழர் பெரியார் உடலால் மறைந்து நாற்பத்தி இரண்டு ஆண்டுகள் முடியும் தருவாயில் இன்றைக்கு திராவிடர் நாடாம் தமிழ்நாட்டின் சமூக அரசியல் விவாத தளங்களில் (அச்சு ஊடகம், காட்சி ஊடகம் இவை இரண்டிலும்) இன எதிரிகளான பார்ப்பனர்களும், இன துரோகிகளான விபீசணர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், அனுமன், சுக்கிரவன் போன்ற குரங்குகளும் எட்டப்பர்களும் அமர்ந்து கொண்டு திராவிடர்களை இன இழிவிலிருந்து மீட்க வந்த தலைவர் தோழர் பெரியார் குறித்தும், அவருடைய திராவிடர் இயக்கம் குறித்தும் காழ்ப்புணர்ச்சியுடன் ஆதாரமற்ற அவதூறுகளைப் பதிவு செய்கிறார்கள். நேர்மையான விமர்சனங்களை பெரியாரும் அவரது இயக்கமும் எதிர்கொண்டு வந்துள்ளது. எதுவும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது அல்ல என்பதை உறுதியாக நம்பும் அதே வேளையில் அதற்கான நேர்மையான பதிலையும் 'காட்டாறு' பதிவுசெய்கிறது.

இந்த இன எதிரிகளின் விமர்சனங் களுக்குக் காரணம், இந்தியாவில் இதற்கு முன்னால் மத்தியில் ஆட்சி புரிந்த காங்கிரஸ் அரசு மேற்கொண்ட வெகு மக்களைப் பாதிக்கும் நாசகார புதிய பொருளாதார கொள்கையும் – குறுகிய அரசியல் நலன்களுக்காக மேற் கொள்ளப்பட்ட மதவாத நடவடிக்கை களும் – தொழிலாளர் நல விரோதச் சட்டங்களை வேகமாக நடைமுறைப் படுத்தியதும் – வெளிநாட்டு, உள்நாட்டுப் பெருமுதலாளிகளின் நன்மைக்கான பொருளாதாரக் கொள்கைகளை வகுத்ததும் – இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலக் கட்சிகள் தங்கள் கொள்கைகளுக்கு விரோதமாக ( இங்கே ஏய்த்துப் பிழைக்க மட்டுமே பயன்படுகிற எந்தச் சுதந்திரமும் இல்லாத மாநில ஆட்சிக்காக எல்லா வற்றையும் அடகு வைத்து ) சங்பாரிவார் அமைப்புகளோடு கூட்டணி வைத்ததும் – இன்றைக்கு மத்தியில் சங்பாரிவார் அமைப்பின் அரசியல் பிரிவு பா.ஜ.க ஆட்சியைப் பிடித்ததும் ஆகும். பார்ப்பனர்களின் துணிச்சலுக்கு காரணம் இவையே என்று கருதும் பெரியாரிய லாளர்கள், பெரியார் வகுத்துத் தந்த பாதையில் கருத்தியல் ரீதியாக சந்திக்கவே இந்த கட்டுரையின் தலைப்பும் மையக் கருத்தும்.

எனது கொள்கை சாதி ஒழிப்பு, பகுத்தறிவு, சாதி ஒழிப்பு பூரணமாக ஏற்படும் வரை வகுப்புவாரி உரிமை பிரதிநிதித்துவம் வேண்டும்

– தோழர் பெரியார் 06.03.1967

என் பிறவி காரணமாக என் இன இழிவுக்குக் காரணமாக இருக்கும் சாதியை ஒழிப்பதும், என் இன மக்களாகிய தமிழர்களுடையவும், என்னுடையவும் தாய்நாடான தமிழ்நாட்டைப் பார்ப்பனர் களின் அடிமைத் தளையிருந்தும், சுரண்டலில் இருந்தும் மீட்டுச் சுதந்தரமாக வாழ வைக்க வழிசெய்வதுமான தனித் தமிழ்நாடு பெறுவதும் என் உயிரினும் இனிய கொள்கைகளாகும் அந்த இலட்சியங்களை அடையத் தகுந்த விலையாக என் உடல், பொருள், ஆவி அத்துனையும் கொடுப்பதற்கு உடன்படுகிறேன்.

– தோழர் பெரியார் 15.12.1957

புராண இதிகாசங்களில் (இவைகளை ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும்) திராவிடர் இனத் தலைவர்களைக் கொன்றொழித்தும், இந்துமதப் பண்பாட்டை ஏற்காத சமண மதத் துறவிகள் எட்டாயிரம் பேரைக் கழுவில் ஏற்றிக் கொன்றும், புத்த மதத்தை அழித்தும், பெரியார் காலம் வரை தாக்குதல்களை நடத்தியதும் வரலாற்றில் நாம் அறிந்தவைதான். இந்தியப் பாமர மக்களால் மகாத்மா என்று அழைக்கப்பட்ட தோழர் காந்தியை இவர்களுடைய இந்துமதத்திற்குப் பயன்பட்ட வரை இவர்களும் 'மகாத்மா' என்று அழைத்து வந்தார்கள். தோழர் காந்தியார் இந்துமதத்தையும் பார்ப்பனர்களையும் புரிந்து கொண்டு வகுப்புவாரி உரிமைக்கு ஆதரவாகப் பேசியவுடன் ஆர்.எஸ்.எஸ் பார்ப்பான் நாதுராம் கோட்சேவால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். இவைகளெல்லாம் இந்தியாவில் பார்ப்பனர்களையும் வேதமதமான இந்து மதத்தையும் எதிர்த்தவர்களுக்கு ஏற்பட்ட கொடூரம்..!

இக்கொள்கைகள் அனைத்தும், இராஜ நாகங்களை விடக் கொடிய பார்ப்பனர்களும், அதன் கொடிய நச்சை விடக் கொடிய கொள்கைகளை கொண்ட இந்துமதம் கற்பித்த பிறவி வருணாசிரம

**எதிரியையோ, கேடுகளையோ ஜெயிக்க வேண்டுமானால் அவைகளை நன்றாக வெறுக்க முதலில் துணிவு வேண்டும். அதற்குப் பயந்தால் வெற்றி சிரமாகப் போய்விடும். எதிரியிடம் அன்பு காட்டிக் காரியம் சாதிக்க வேண்டும் என்று நினைப்பது வடிகட்டின கோழைத்தனமே ஆகும்.**

– 25.01.1943 விடுதலை

தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட இந்துமத பண்பாட்டிற்கும் எதிராக தோழர் பெரியார் மேற்கொண்ட பல்முனைத் தாக்குதல் காரணமாக தமிழ்நாட்டில் பண்பாட்டுப் புரட்சி ஏற்பட்டது. (இது இன்னும் முழுமைப் பெறவில்லை..!..?) இதன் காரணமாக பார்ப்பனர்களுடைய ஆதிக்கம் தமிழ்நாட்டில் சரிந்தது.

பெரியாரின் பெரும் பணி 1971 ல் சேலத்தில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டை ஒட்டி நடைபெற்ற ஊர்வலத்திற்குத் தலைமை ஏற்று வந்த தோழர் பெரியாருக்குக் கறுப்புக் கொடி காட்டுவதாக இந்துமகா சபையைச் சேர்ந்தவர்கள் வரம்புமீறி நடந்து கொண்டார்கள். பெரியாரின் தோழர்கள் அதற்கு எதிர்வினையாகச் சூத்திர சம்புகனை வெட்டிக் கொன்றும், சூத்திர இளவரசி சூர்ப்பனகை காது, மூக்கு, முலை அறுத்து மானபங்கப்படுத்திய ஆரிய இராமன், இலட்சுமணன் ஆகியோரின் உருவ பொம்மைகளை செருப்பால் அடித்து பாடம் புகட்டினார்கள்.

இதனைத் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களுக்குத் தலைமை தாங்கிய குலக்கல்வித்திட்டம் என்னும் சீரழிவுத் திட்டத்தைக் கொண்டுவந்தவரும், இந்திய பாகிஸ்தான் பிரிவினைக்கு தோழர் காந்தியாரை ஒப்புக்கொள்ள வைத்தவரும், அரசியல் குதிரை பேரங்களுக்கு வித்திட்டவரும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஒதுங்கி இருந்து துரோகம் இளைத்தவரும், கொல்லைப்புற வழியாக ( நடிகர்கள், கலைஞர்களுக்கான இடஒதுக்கீட்டில்) முதலமைச்சரான குல்லுகப்பட்டர் இராஜாகோபாலாச்சாரியும், அவரது பார்ப்பன பத்திரிக்கைகளும் இணைந்து 1971 இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் திமுக வுக்கு எதிராக பெரிய அளவில் பிரச்சாரம் செய்தனர்.

ஆனால் தேர்தல் முடிவுகள் தோழர் பெரியாரின் கருத்தை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்லும் வகையில் 1971 இல் திமுக விற்கு 183 இடங்களை தந்து, திராவிடர் இன மக்கள் பார்ப்பனர்கள் முகத்தில் கரியைப் பூசினர். அன்றைக்கு வீழ்ந்த பார்ப்பன சுதந்திரா கட்சி அழிந்தே போனது. காங்கிரஸ் இன்று வரை உயர்வு பெறவே முடியவில்லை. அந்த நேரத்தில் இராஜாஜியின் அரசியல் ஏடான கல்கி (4.4.1971)

“இனி தமிழகம் ஆஸ்திகர் வாழத்தகுதி இழந்து விட்டது. இந்த ராஜியத்தை விட்டே வெளியேறிவிட வேண்டும் என்று சில மகா புருஷர்கள் உட்பட பலர் எண்ண தொடங்கிவிட்டனர்” என ஒப்பாரி வைத்து ஓங்கி அழுதது.

அன்று தொடங்கி (அச்சு ஊடகம், இன்று உள்ள காட்சி ஊடகத்தில்) பார்பனர்கள் திராவிடர் இயக்கத்தின் மீதும், அதன் ஒப்பற்ற தலைவர் தோழர் பெரியார் மீதும், நேர்மையற்ற, தரக்குறைவான வார்த்தைகளின் துணையுடன் நஞ்சை காக்குகிறார்கள். இது குறித்துத் தோழர் பெரியார் தான் வாழ்ந்த காலத்தில் கூறிய கருத்துகள் வாசகர்களின் பார்வைக்கு! (இன்று காட்சி ஊடகத்தில் வரும் பார்ப்பனர்களுக்கும், பார்ப்பன அடிவருடிகளுக்கும் இது பொருந்தும்.– கட்டுரையாளர்)

1. பொதுமக்கள் பத்திரிக்கைகள் பற்றியோ, பத்திரிக்கைகார்கள் பற்றியோ சிந்திக்கும் போது, அப்பத்திரிக்கை எதற்காக நடத்தப்படுகிறது ? பத்திரிக்கை உரிமையாளரின் இலட்சியம், சொந்தக்கொள்கை, நாணயம், நடத்தையின் தரம் என்ன? அப்பத்திரிக்கையால் ஏற்பட்ட பலன் என்ன?, நடத்துபவன் பார்ப்பானாக இருந்தால் அவனிடம் யோக்கியம் எதிர்பார்க்க முடியுமா?, வணிகனாக இருந்தால் அவனிடம் நாணயம் எதிர்பார்க்க முடியுமா?, பணக்கரானாக இருந்தால் அவனிடம் கொள்கையையோ, நேர்மையோ, எதிர்பார்க்க முடியுமா?, வயிற்றுப் பிழைப்புக்கரானாக இருந்தால், அவனிடம் கொள்கை, நாணயம், நேர்மை, ஒழுக்கம், பொதுநலம், ஆகிய குணங்களை எதிர்பார்க்க முடியுமா?. என்று சிந்தித்து பார்க்க வேண்டும்.

– 27.10.1965 விடுதலை

2. உலகத்திலேயே மானங்கெட்ட மக்களில் நெம்பர் 1 இந்தப் பத்திரிக்கை நிருபர்கள்தான். எவ்வளவு அயோக்கித்தனம் செய்ய வேண்டுமோ அவ்வளவு அயோக்கியத் தனங்களையும் செய்கிறர்கள். எல்லாப் பத்திரிக்கைகளும் பார்ப்பனப் பத்திரிக்கைகள். அவர்கள் அடிமைப் பத்திரிக்கைகள்தான். நிருபர் எவனை எடுத்தாலும் பார்ப்பன நிருபர்கள்தான் வருவார்கள். நம்மிடம் பேசும் போது நாம் ஒன்று சொன்னால் அதைத்திருத்தி விஷமத்தனமாகப் பிரசுரிப்பார்கள். நம்மவர்கள் பத்திரிக்கை நடத்துகிறார்கள் என்றாலும் அவன் என்னவோ பார்ப்பானுக்கே தான் பிறந்தாகக் கருதிக்கொண்டு, பார்ப்பன நலனுக்கு ஆன பத்திரிக்கையாகவே நடத்துகிறான். பார்ப்பனர்களையே வைத்து அவர்கள் இஷ்டப்படியே நடத்துகிறான்!

– 23.02.1968 விடுதலை

இந்தச் சூழலில் தோழர் பெரியார் 1953 ல் புத்தர் பிறந்த நாளில் திராவிடர் இன மக்களை மடமையிலிருந்து மீட்டெடுக்க ஆபாசமான பிறப்பைக் கதையாகக் கொண்ட விநாயகன் உருவ பொம்மை களை நிலத்தில் போட்டுடைக்கும் பண்பாட்டுப் போரட்டத்தை அறிவித்தார். வழக்கம் போல பார்ப்பனர்களும் பத்திரிக்கைகளும், தோழர் பெரியார் மற்றும் தொண்டர்கள் மீதும் வன்முறையை ஏவினார்கள். தோழர் பெரியார் மீண்டும் 09.05.1948ல் தூத்துக்குடியில் பார்ப்பனர் களை எச்சரித்துப் பேசிய அந்த உரையை நினைவூட்டினார். அந்த உரை கீழே.....

பார்ப்பனர்கள் வாழை இலைகள், திராவிடர்கள் முட்செடிகள். வாழை இலை முள் மீது மோதினாலும், முள் வாழை இலை மீது மோதினாலும் வாழை இலைதான் அழிந்துபடும். அது போலப் பார்ப்பனர்கள் திராவிடர்கள் மீது மோதினால் அவர்கள் தான் அழிவார்கள். திராவிடர்கள் பார்ப்பனர்களை மோத ஆரம்பித்தார் களானால் அப்புறம் பார்ப்பனப் பூண்டே இந்நாட்டில் இருக்காது.

ஆனாலும் பார்ப்பனர்களுடைய வன்முறைத் தாக்குதல் தொடர்ந்து கொண்டே இருந்தது. இந்நிலையில் நேர்காணல் ஒன்றில் தோழர் பெரியாரிடம், அகிம்சையைப் போதித்த புத்தனின் பிறந்த நாளில் வினாயகன் சிலை உடைப்பை நடத்தலாமா? என கேட்கப்பட்டது. அதற்கு அவர் “அறிவியல் பார்வையோடு அறிவைப் போதித்தவன் பிறந்த நாளில் மூடநம்பிக்கை ஒழிப்பை நடத்துவதுதான் சிறந்தது” என பதில் அளித்தார். என்றாலும் வன்முறை தொடர்ந்தது.

தனது அடுத்த நடவடிக்கையாக சேலம் மாவட்டம் ஆத்தூரில் 1953 அக்டோபர் 10, 11 தேதிகளில் திராவிடர் கழக மாநாடுகளைக் கூட்டினார். அம்மாநாடுகள் சரித்திர புகழ்பெற்று விட்டன. இங்குதான் தோழர் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் “கத்தி வைத்துக் கொள்ள வேண்டும், தாக்குவதற்காக அல்ல, தற்காப்புக்காக” என்ற புதிய புரட்சித் திட்டத்தை அறிவித்தார். உடன் “பார்ப்பானே வெளியேறு, திராவிடனே தயாராய் இரு” என்ற சுருக்கென்று தைக்கும் முழக்கம் உருவானது.

இந்த நிலை திரும்ப வேண்டும் என்று பார்ப்பனர்கள் நினைக் கிறார்களா? நாங்கள் வன்முறையில் இன்னமும் கூட நம்பிக்கையற்றவர் களாகத்தான் இருக்கிறோம்.! இதனைக் கோழைத் தனமாகக் கருதக்கூடாது. இனியாவது பார்ப்பனர்களும், பார்ப்பன அடிவருடி களும் ஊடகங்களில் தோழர் பெரியாரையும், திராவிடர் இயக்கக் கோட்பாடு களையும், திராவிடர் இன அரசியல் சமூக பொருளாரதாரக் கோட்பாடு களையும் திராவிடர்களின் உரிமைகளையும் குறிப்பாக, சமூக நீதியான வகுப்புவாரி உரிமைத் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளும் போது கண்ணியமான வார்த்தைகளுடனும் நேர்மையுடனும் அணுக வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

எதிரியையோ, கேடுகளையோ ஜெயிக்க வேண்டுமானால் அவைகளை நன்றாக வெறுக்க முதலில் துணிவு வேண்டும். அதற்குப் பயந்தால் வெற்றி சிரமாகப் போய்விடும். எதிரியிடம் அன்பு காட்டிக் காரியம் சாதிக்க வேண்டும் என்று நினைப்பது வடிகட்டின கோழைத்தனமே ஆகும்.

– 25.01.1943 விடுதலை

எனவே, எங்கள் திராவிடர் இன மக்களிடம் செல்வோம்! கீழ்கண்ட முழக்கங்களை முன் வைப்போம்..! பார்ப்பனர்கள் திராவிடர் இன மக்களுக்கு எதிராகச் செயல்படும் போக்கிற்கு எதிராக அரசியல் – பொருளாதாரம் – பண்பாடு என அனைத்துத் தளங்களிலும் பார்ப்பன – பார்ப்பனிய எதிர்ப்பைக் கடுமை யாக்குவோம்.

1. தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து அச்சு, இணைய, காட்சி ஊடகங்களிலும் வகுப்புவாரி உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. அனைத்து ஊடகங்களிலும் ST, SC, MBC, BC என அனைத்து பிரிவுகளுக்கும், சிறுபான்மை யினருக்கும் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்பப் பிரதிநிதித் துவம் வழங்கப்பட வேண்டும்.

3. வகுப்புவாரி உரிமையைச் செயல்படுத்தாத தகவல் ஊடகங்களை வெகு மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

4. முற்றிலும் பார்ப்பனர்களாலும், பார்ப்பன அடிவருடிகளாலும் நடத்தப்படும் ஊடகங்களைப் புறக்கணிக்க வேண்டும்.

5. அவற்றை வாங்க வேண்டியும், பார்க்க வேண்டியும் வந்தாலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான நிகழ்ச்சிகள், செய்திகள் வரும்போது அஞ்சல் வழியிலும், தொலைபேசிகள், சமூகவலைத்தளங்கள் வழியாகவும் எதிர்ப்பு அலையை உருவாக்க வேண்டும்.

6. பிறப்பின் அடிப்படையில் மனித சமூகத்தை நாலு வர்ணம், நாலாயிரம் சாதிகளாகப் பிரித்து வைத்துள்ள இராமாயணம், மகாபாரதம், கீதை, சமஸ்கிருத மொழியிலான நூல்கள் இவைகளை கட்டிக் காக்கும் சங்கர மடங்கள், பீடாதிபதிகள் ஆகியவற்றை முழுமையாகப் புறக்கணிக்க வேண்டும்.

7. நமது அடிமைத்தனத்தை நிலைநிறுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்து மதப் பண்டிகைகளை முற்றாகப் புறக்கணிக்க வேண்டும்.

8. பிறப்பிலிருந்து இறப்பு வரை இந்து மதம் உருவாக்கி நாம் நடைமுறைப்படுத்தும் அனைத்துப் பண்பாட்டு நடவடிக்கைகளையும் புறக்கணிக்க வேண்டும்.

“நன்றாய் வெறுக்கத் தெரிந்தவனும், வெறுக்கத் துணிந்தவனுமே
வெற்றி பெறுவான்”

## 2015 லும் ஊடகங்களில் பார்ப்பனர்களின் ஆதிக்கம்

தமிழ்நாட்டில் தொலைக்காட்சி ஊடகங்களை நடத்துபவர்கள் பெரும்பாலும் தமிழர்கள் தான். தமிழர்களால் நடத்தப்படும் காட்சி ஊடகங்களில் விவாதங்களில் கலந்து கொள்பவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களாகவே உள்ளனர். சமூக ஆர்வலர்கள், சமூகச் செயல் பாட்டாளர்கள் என்ற போர்வையிலும், அரசியல் கட்சிகளின் போர்வையிலும் பார்ப்பனர்கள் தொலைக்காட்சி விவாதங்களில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

ஹெச்.இராஜா
அமெரிக்க நாராயணன்
இராமசுப்பிரமணியன்
பத்ரி ஷேசாத்திரி
கே.டி.இராகவன்
அருண்குமார் தபே
நாராயணன்
மாலன்
நித்தியானந்தன்
ஆடிட்டர் பிரபாகரன்
ஆசிர்வாத ஆச்சார்யா
சுமன் சி இராமன்
சடகோபன்
ஜி.சி.சேகர்
இல.கணேசன்
ஷ்யாம் சேகர்
என்.எஸ். வெங்கட்ராமன்
இராதாகிருஸ்ணன்
வெங்கடேசன்
ஆனந்த் சீனிவாசன்

இது ஒரு முடிவுறாத பட்டியல். ஊடகத்துறையில் பணியாற்றும் நண்பர்களுக்கு இன்னும் விரிவான பட்டியல் தெரியும். இப்படி நேரடியாகப் பார்ப்பனர்களாக இல்லாவிட்டாலும் அர்ஜூன் சம்பத், வானதி சீனிவாசன், தமிழிசை சவுந்திரராசன் போன்ற பார்ப்பனரல்லாதவர்களும் தொலைக்காட்சிகளில் பார்ப்பன நலன்களுக்காகவே வாதாடுகின்றனர்

வன்னியர், கவுண்டர், தேவர் போன்ற பிற்படுத்தப்பட்ட ஜாதிகளின் அரசியல் கட்சிகளும் பார்ப்பன – பார்ப்பனிய நலன்களுக்காகவே முழங்குகின்றன.

இதுபோன்ற பார்ப்பன – பார்ப்பனியக் குரல்கள் தான் சமுதாயத்தில் பார்ப்பனர்கள் விரும்பும் கருத்தாக்கத்தை உருவாக்குகின்றன. பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராக இந்தத் துறையிலும் திராவிடர் இயக்கத் தோழர்கள் முனைப்புக் காட்ட வேண்டும்.



**இளமுகில்**
bodoland.
அஸ்ஸாம்

# அஸ்ஸாம் பழங்குடிப் பெண்களும், திணைக்குடி மக்களும்




நம்மாழ்வார் அய்யாவை வணங்கி,

'பராமா' கிராம விவசாயிகளுக்கான 'கூட்டுப் பண்ணை விவசாயம்' பற்றிய அறிமுகப் பயிற்சியைக் கடந்த ஒரு வாரமாக நடத்தி வருகிறோம், போடோ பழங்குடி மக்களுக்கு 'போடோலாந்து' மாநிலமும், 'ராஜ்பன்க்ஷி' பழங்குடி மக்களுக்கு 'கமத்தப்பூர்' மாநிலம் வேண்டும். அசாமியர்களுக்கு இரண்டும் தரக்கூடாது. இதற்குத் தான் இங்கு வழக்கமான 'போடோ, அபோடோ, ராஜ்பன்க்ஷி' 'பந்த்'கள். மாதம் குறைந்தது 7 நாட்கள் பந்த். பல பணிகள் முடங்குவது போல், எங்கள் பயிற்சியும் முடங்கிப் போகிறது.

பயிற்சியில் அதிகம் பங்குகொண்டவர்கள் போடோ, ராபா மற்றும் ராஜ்போன்ஷி பழங்குடி மக்கள். 99 சதம் பெண்கள். ஒரு நாளைக்கு 50 முதல் 70 பேர் வருகிறார்கள், கைக்குழந்தையுடன் வந்து பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சியாளர் கால்களுக்கு இடையில் புகுந்து ஓடும் குழந்தைகளோடும், திடீர் என்று அழும் குழந்தைகளோடும் இந்த பயிற்சி நடைபெறுகிறது, மகிழ்ச்சியோடு.

பழங்குடி மக்களைத்தவிர அஸ்ஸாமியர்கள் இதுபோன்ற பயிற்சிகளில் அதிகம் பங்குகொள்வதில்லை. காரணம், அஸ்ஸாம் பெண்கள் ஆண்களைச் சார்ந்து இருக்கிறார்கள் என்பதே. பழங்குடிப் பெண்கள் ஆண்களைச் சாராது இருப்பதால், தனித்து முடிவெடுக்க முடிகிறது. குடும்பத்துக்காகப் பொருளீட்ட, கடுமையாக உழைக்கிறார்கள். கைகுழந்தையை முதுகோடு பிலு (துண்டு) வால் இறுக்கிக் கட்டி, வயல் வேலை செய்கிறார்கள். பன்றி மேய்கிறார்கள். ஆடு, மாடு, கோழி, வாத்து, பட்டுப்புழு, மீன் மற்றும் புறா வளர்க்கிறார்கள். பட்டதாரி மைனாக்களும் (திருமணமாக பெண்கள்) இந்தப் பணியைச் சிறுதும் தயக்கமின்றி, பொறுப்புடன் செய்கிறார்கள்.

இப் பழங்குடி இனப்பெண்கள் எலிக்கறி, பன்றிக்கறி, நத்தை, உடும்பு மற்றும் பிற மிருகங்கள் சாப்பிடுவதையும், தினமும் மது அருந்துவதையும், பள்ளி செல்லும் வயதுடைய மகனிடமோ, மகளிடமோ கடைக்குச் சென்று மளிகைச் சாமான் வாங்கிவரச் சொல்வதுபோல 'மது' வாங்கிவரச் சொல்வதையும், அவர்களும் சிறிதும் கூச்சப்படாமல் 'குடு குடு' வென்று போய் வங்கி வந்து 'இந்தாம்மா' என்று கொடுப்பதையும் இப்பகுதி முழுக்கக் காணலாம்.

நண்பர்களோடு சேர்ந்து மது அருந்துவதும், போதையில் நடனமாடுவதும் பெரும்பாலான குடியிருப்புக்களில் இயல்பாக நடப்பதைக் காணலாம். 'ச்சீ! ஒரு குடும்பத்துப் பொம்பள இப்படி செய்யலாமா?' என்று 'தலைய விரிச்சுப் போட்டுத் திமிரா scooty ஓட்டிட்டு போறத பாரு! (நன்றி: அக்கா 'பிரியா தம்பி'யின் "பேசாத பேச்செல்லாம்") என்று என்னும் நம் தமிழ் பொதுப் புத்தி, இவற்றையெல்லாம் பார்த்தால், சட்டென்று முகம் சுளிக்கக் கூடும்.

வங்கிகள் இந்தப் பழங்குடிப் பெண்களுக்கு கடன் தரத் தயங்குவதில்லை. 'கிராமின் விகாஸ் வங்கி' மேலாளர் கூறுகையில், "பழங்குடிப் பெண்களுக்குத் தயங்காமல் கடன் (15%வருட வட்டிக்கு) கொடுக்கலாம். எப்படியும் உழைத்துக் கால அவகாசம் முடியும் முன்பே கடனை அடைத்து விடுவார்கள். 'பந்தன்' போன்ற ( 24 % வருட வட்டிக்கு ) கடன் தரும் நிறுவனங்களுக்குக்கூட கடனை அடச்சுடுறாங்க. கடன் வாங்குற ஆம்பிளைங்க தான் கடன அடைக்கிறதே இல்ல. இங்கு, ஆண்களால் திருப்பி அடைக்கப்பட்ட கடன் விகிதம் 25 % க்கு கீழே இருக்கிறது. அதான் நாங்க அவங்களுக்குக் கடன் தர மறுக்குறோம்" என்கிறார்.

**தினமும் மது அருந்துவதையும், பள்ளி செல்லும் வயதுடைய மகனிடமோ, மகளிடமோ கடைக்குச் சென்று மளிகைச் சாமான் வாங்கிவரச் சொல்வதுபோல 'மது' வாங்கிவரச் சொல்வதையும், அவர்களும் சிறிதும் கூச்சப்படாமல் 'குடு குடு' வென்று போய் வங்கி வந்து 'இந்தாம்மா' என்று கொடுப்பதையும் இப்பகுதி முழுக்கக் காணலாம்.**

இவர்கள் வெளி மாநிலங் களைப் பார்க்கச்செல்ல மிகவும் விரும்புகிறார்கள். பள்ளிக்குக்கூடச் செல்லாத, 50+ வயதை சார்ந்த 2 'கூடி' (அத்தை ) கள் சேர்ந்து, கன்னியாகுமரி வரை இரயிலில் சென்று பார்த்து வந்துள்ளனர். அதுவும் இரண்டாம் வகுப்பு டிக்கெட்டோடு. தன் உழைப்பால் ஈன்ற சிறு பணத்தைக்கொண்டு – போடோ மொழியைத் தவிர, வேறு மொழி அறியாத இவர்கள் பல மாநிலங்களுக்குச் சுற்றுலா சென்று வருகிறார்கள்.



மகளிர் சுய உதவிக்குழு மூலம் மீன் வளர்ப்பில் சிறப்பாகச் செயல்பட்டு வெற்றி பெற்றமையைப் பெருமை யடித்துக்கொள்ள, குழுவைச் சேர்ந்த சில பழங்குடிப் பெண்களை – தமிழகத்தில் நடைபெற இருந்த நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைத்து செல்ல, ஒரு தனியார் அறக்கட்டளை திட்டமிட்டது. பயண ஏற்பாடுகளும் நடைபெற்றது. தமிழகம் செல்கிறோம் என்ற மகிழ்ச்சியில், இந்த வாய்ப்பு திரும்ப கிடைக்காது என்ற எண்ணத்தில், பயணத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது என்று கருதி தன் 3 மாத இரண்டாம் கருவை மகிழ்ச்சி யோடு சிதைத்தார் 'லொக்கி' பாய்டோ (அக்கா).

பயணத்துக்கு 5 நாட்கள் முன்பு, 'பண நெருக்கடியைக் காரணம் சொல்லி' அவர்களை அழைத்துச் செல்லவில்லை அந்த அறக்கட்டளை. லொக்கி பாய்டோ உள்ளுக்குள் புழுங்கினாலும், அவர் அறக்கட்டளையின் தலைமை ஒருங்கிணைப்பாளரிடம் சொன்னது ஒன்று தான்,

"எங்க வாழ்வாதாரத்தை உயர்த்த இங்க வந்திருக்கீங்கனு நம்புறோம். உயர்த்தவும் செஞ்சுருக்கீங்க. இனிமே உங்க பெருமைக்காக, சுயலாபத்துக்காக எங்கள ஏமாத்தாதீங்க. நாங்க முழுசா நம்புறோம். எங்க நம்பிக்கை முட்டாள் தனமானதுனு நினைக்க வச்சுடாதீங்க!". என்றார்.

இந்த அறிமுகப் பயிற்சியில் கிருஷி விக்யான் கேந்திரா (KVK) மற்றும் அஸ்ஸாம் வேளாண் பல்கலைக்கழகப் (AAU) பேராசிரியர்கள், வெற்றிபெற்ற விவசாயிகள் போன்றோர் பயிற்சி தருகிறார்கள். AAU தான் கண்டறிந்த, கண்டுபிடித்த வெற்றிகரமான செயல்முறைகளை, தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்குக் கொண்டு சேர்க்கவே KVK செயல்படுகிறது. இப்படி இந்தியா முழுவதும் அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களும் KVK வை அமைத்துள்ளது. மீன் வளர்ப்பு விரிவுரையாளர் 'சான்மொய்னா புண்யா' மட்டுமே நடைமுறைச் சாத்தியங்களோடு சரளமாகக் கூட்டுப்பண்ணை, மீன் வளர்ப்புப் பயிற்சி யளிக்கிறார். மிகவும் வருத்தமான ஒன்று, கூட்டுப்பண்ணை பற்றிய அறிவு இங்குள்ள விவசாயம் சார்ந்த படித்த பயிற்சியாளர்களுக்குக் கூடத் தெரிய வில்லை என்பதுதான். 'இயற்கை விவசாயம்', ஃபுகோகாவின் 'ஒற்றை வைக்கோல் புரட்சி', பரத் மன்சாடாவின் 'மாபெரும் வேளாண்மைச் சவால்' இப்படி விவசயிகளுக்கு விவசாயிகளே வகுத்துத் தந்த பல செயல்முறைகளின் பெயரைக் கூட அறிந்திருக்கவில்லை என்பது மேலும் சங்கடத்தை தருகிறது.

ஏன் அறிந்திருக்கவில்லை? விவசாயிகள் முட்டாள்கள் என்றா? அவர்கள் செயல்முறைக்கு அறிவியல் முறைப்படி விளக்கம் தரவும் இல்லை அல்லது தர இயலவில்லை என்றா? அவர்கள் உங்கள் பாடப் புத்தகத்தில் இடம்பெறவில்லையா? இயற்கை விவசாயமே முழுமையான அறிவியல் பூர்வமான விவசாயம் என்பதை ஏன் மறுக்கிறீர்கள்? விவசாயத்தில் உள்ள பல்வேறு செயல்பாடுகளைப் பிரித்துப் பார்ப்பது அபத்த மில்லையா? விவசாயிகளைத் தொழில் முனைவோர் என்று பறைசாற்று கிறீர்கள். விவசாயம் என்பது வாழ்வியல் முறையா? தொழிலா?

**பழங்குடி மக்களைத்தவிர அஸ்ஸாமியர்கள் இதுபோன்ற பயிற்சிகளில் அதிகம் பங்குகொள்வ தில்லை. காரணம், அஸ்ஸாம் பெண்கள் ஆண்களைச் சார்ந்து இருக்கிறார்கள் என்பதே. பழங்குடிப் பெண்கள் ஆண்களைச் சாராது இருப்பதால், தனித்து முடிவெடுக்க முடிகிறது.**

ஒரு கிராமம் உரம் தயாரிக்கும், ஒரு கிராமம் பூச்சிக்கொல்லி (பூச்சி விரட்டி இல்லை) தயாரிக்கும், ஒரு கிராமம் மண்புழு உரம் தயாரிக்கும், ஒரு கிராமம் மீன் குஞ்சுகள், விதைகள் தயாரிக்கும், மற்றொரு கிராமம் மீன் உணவு தயாரிக்கும். இதனால் விவசாயிகள் தொழில் முனைவோர் ஆகிறார்களாம். இதை 'ONE VILLAGE ONE PRODUCT'என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறீர்கள். தையல் துறையில் 'USHA INTERNATIONAL' நிறுவனமும் 'ONE VILLAGE ONE PRODUCT'திட்டத்தைச் செயல் படுத்துகிறது. தையல் துறை இயற்கையின் தயவால் நடைபெறும் தொழில் இல்லை. பாதிப்புகளும் இல்லை. விவசாயம் அப்படியா? விவசாயத்திற்கு இயற்கையை மட்டுமே நம்பி இருப்பவர்களை, ஏன் அடுத்தவர்களை நம்பி இருக்க வகைசெய்கிறீர்கள்?

பழங்குடி பெண்ணான லொக்கி பாய்டோவின் கூற்று, மக்களுக்காக மக்கள் பணத்தில் வாழும் அனைத்து அரசு பணியாளர் களுக்கும் பொருந்தும்.






தமிழில்: **யாழ்மொழி**

# கமான் கேர்ல்ஸ் லெட்ஸ் கோட்!!!

## Come on Girls… Let's code !!!

மார்க்ஜக்கர்பெர்க், பில்கேட்ஸ், ஸ்டீவ் ஜாப்ஸ் என கணினித் துறையில் உச்சரிக்கப் படும் பெயர்கள் பெரும்பாலும் ஆண்களுடையதே! நவீன கணினித் துறையில் ஆண்களே ஆதிக்கம் செலுத்திவருகின்றனர்.

ஆனால் கணினித் தொழில் நுட்பத்தின் முன்னோடிகளாக அடாலவ்லேஸ் ( Ada Lovelace ) போன்ற பல பெண்கள் இருந்துள்ளனர். முதல் டிஜிட்டல் கணினிகளை ப்ரோகிராம் செய்ததுகூடப் பெண்கள்தான். பல ஆண்டுகளாகக் கணினி அறிவியல் பட்டப்படிப்பை ஆண்களைவிடப் பெண்களே அதிகம் படித்தும் வந்தனர். ஆனால் 1984 ல் ஓர்மாற்றம் ஏற்பட்டது. மற்ற தொழில்சார் துறைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்த போதும், கணினி அறிவியல் துறையில் மட்டும் பெண்களின் சதவீதம் அதல பாதாளத்தில் விழுந்தது.

என்னதான் நடந்தது? என்ற கேள்விக்குப் பதில்தேட முயற்சித்தபோது தெளிவானதொரு பதில் கிட்டவில்லை. ஆனால் அவ்வீழ்ச்சிக்கான ஆரம்பப்புள்ளி என்னவெனில், 1980 களில் தனிநபர் கணினிகள் (Personal computers) பெருவாரியான அமெரிக்க வீடுகளில் பயன்பாட்டிற்கு வரத்தொடங்கியது. அப்போதிலிருந்தே, கணினித்துறையில் பெண்களின் பங்களிப்பு வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

ஆரம்பகாலத்தில், பெர்சனல் கணினி விளையாட்டுப் பொருள் போல்தான் பயன்படுத்தப்பட்டது. நாம் அதில் சில கேம்களையும், சொல்செயலாக்கங்களையும் ( Word Processing ) செய்யலாம். இவ்வகைக் கணினிகள் ஆண்பிள்ளைகளுக்கான ஒன்றாகத் தான் சந்தைப்படுத்தப்பட்டன. கணினி ஆண்களுக்கானது என்ற கருத்தாக்கம்தான், நாம் கணினிப்புரட்சி பற்றியும், கணினி வல்லுநர்கள் யார்? என்பதையும், வரையறுக்கஉதவியது.

இக்கருத்தாக்கத்திற்கு மேலும் வலுசேர்க்கும் விதமாக 80 களில் தான் வியர்ட்சயின்ஸ் (Weird Science ), ரிவென்ஜ் ஆஃப் தி நெர்ட்ஸ் ( Revenge of the Nerds ) வார்கேம்ஸ் ( War Games ) போன்ற திரைப்படங்களும் வெளியாகின. விகாரமான, மேதாவியான கதாநாயகன் தனது தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, இக்கட்டை எதிர்கொண்டு பெண்ணை வெற்றிகொள்ளும் வகையில் அத்திரைப்படங்களின் கதைக்கரு அமைந்திருக்கும்.

1990 களில், ஆராய்ச்சியாளர் ஜேன்மார்கோலிஸ் (JaneMargolis) உலகின் தலைசிறந்த ப்ரோகிராம்களில் ஒன்றை உருவாக்கிய கார்னெகிமெலன் பல்கலைக்கழகத்தில் நூற்றுக்கணக்கான கணினி அறிவியல் மாணவர்களைப் பேட்டிகண்டார். பெரும்பாலான பெற்றோர், தங்கள் பெண் பிள்ளைகள் கணினிகள் மீது மிகவும் ஆர்வம் காட்டினால்கூட, பெண்பிள்ளைகளைவிட ஆண்பிள்ளைகளுக்குத் தான் கணினிகளை வாங்கிக் கொடுத்தனர் என்ற உண்மை கண்டறியப்பட்டது.

இவ்வாறு வளரும் பெண் குழந்தைகள் கணினி அறிவியலைப் பயில கல்லூரிகளுக்குச் சென்றபோதுதான் இது ஒரு பெரிய பிரச்சனையாக மாறுகிறது. எப்படிஎன்றால், பெரும்பாலான கணினிஅறிவியல் பேராசிரியர்கள் தங்கள் மாணவர்கள் வீட்டிலேயே கணினிகளில் விளையாடித்தான் வளர்ந்திருப் பார்கள் என்று கருதுகின்றனர்.

அதற்கு பாட்ரிசியா என்ற பெண் மாணவரின் அனுபவம் சிறந்ததோர் எடுத்துக்காட்டு. பாட்ரிசியா ஆர்டனஸ் - இன் (Patricia Ordóñez) குழந்தைப் பருவத்தில், வீட்டில் கணினி இல்லை. ஆனால் பள்ளியில் அவர்ஒரு கணிதமேதை. இடைவேளை நேரங்களில்கூட அவரும், மற்றொரு மாணவரும் சிறப்புக் கணிதம் (Special Maths) செய்வர்.

அதனால் பாட்ரிசியாவிற்கு 1980-களில் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பெண் கணினி அறிவியல் அல்லது எலெக்ட்ரிக்கல் இஞ்சினியரிங் படிக்கலாம் என நினைத்தார். பின்னர், அவர் கணினி அறிவியலில் தனது முதல் அறிமுக வகுப்பில் பங்கேற்றார். தன்வகுப்பிலிருந்த சக ஆண்கள் கணினியைக் கையாண்டும், அதில்

விளையாடியும் அனுபவம் பெற்றிருந்ததால் தன்னைவிட முன்னணியில் இருப்பதை உணர்ந்தார்.

“எனக்கு இன்றும் நினைவிலுள்ளது. ஒரு நாள், பாடம் நடத்திக் கொண்டிருந்த எங்கள் பேராசிரியரை நிறுத்தி நான் ஒரு கேள்வி கேட்டேன். அதற்கு அவர், இப்போது அதைப் பற்றியெல்லாம் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்றார். எனவே நான் கணினித்துறையில் திறமைசாலியாகத் திகழப் போவதில்லை என்று நினைத்தேன்”, என்கிறார் பாட்ரிசியா.

80-களில் பேராசிரியர்களின் எதிர்பார்ப்பைக் ,கணினியைப் பெரிதளவில் பயன்படுத்திய ஆண்களால் மட்டுமே நிறைவேற்ற முடிந்தது. எப்படியோ அவ்வகுப்பில் தேர்ச்சிபெற்றாலும், இறுதியில் கணினி அறிவியல்துறையைக் கைவிட்டு வெளிநாட்டு மொழிகளைப் படித்தார் பாட்ரிசியா. ஆனால், பல ஆண்டுகளுக்குப்பின், மீண்டும் அவர் கணினித்துறைக்குத் திரும்பினார். கணினி அறிவியலில் முனைவர் பட்டமும் பெற்றார். இப்போது பாட்ரிசியா கணினிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

80-களில் கணினி சந்தைப் படுத்தப்பட்டபோது, அது ஆண் குழந்தைகளுக்கான சாதனமாக அறிமுகப் படுத்தப்பட்டதால்தான், 80-களுக்குப் பின் கணினி அறிவியலைப் படிக்கும் பெண்களின் சதவீதம் வீழ்ச்சியடைந்தது.

பலவிருதுகள் பெற்ற திரைப்பட இயக்குனர் லெஸ்லிசில்காட் (Lesley Chilcott) அவர்கள் கூகுள் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்து, கடந்த நவம்பர் மாதம் யூட்யூபில் இலவசமாக வெளியிடப்பட்ட கோட்கேர்ல் (Code Girl) என்ற ஆவணப்படமும் மென்பொருள் உருவாக்கத்தில் பெண்களின் பங்களிப்புக் குறைந்துள்ளதையே கூறுகிறது. கூகுள் நிறுவனம் ஒரு செயிலி உருவாக்கும் போட்டியை (App Development Contest) அறிவிக்கிறது. பரிசுத்தொகை 100,000 அமெரிக்க டாலர்கள். அப்போட்டியில் பங்கேற்க விரும்பும் - பல்வேறு நாடுகளில் வசிக்கும் இளம்பெண்களின் வாழ்க்கையை ஆவணப்படுத்தும் படம் அது. கணினித்துறையில் மென்பொருள் மற்றும் செயலிகள் உருவாக்கத்தில் பெண்களின் பற்றாக்குறையை கோட்கேர்ல் ஆவணப்படமும் எடுத்துரைக்கிறது.

கணக்கெடுப்பின்படி, உலகஅளவில் செயலி உருவாக்குபவர்களில் (App Developers) 80 சதவீதத்திற்கும் மேல் ஆண்களே உள்ளனர். மேலும், பெண்களால் தொடங்கப்பட்ட சாஃப்ட்வேர் கம்பெனிகளின் எண்ணிக்கையும் மிகமிகக் குறைவே! எனவே, கணினித்துறையில், குறிப்பாக மென்பொருள் மற்றும் செயலிகள் உருவாக்கத்தில் மிகவும் வெளிப்படையாகவே பாலின சமத்துவமின்மை நிலவுகிறது.

**பெரும்பாலான பெற்றோர், தங்கள் பெண் பிள்ளைகள் கணினிகள் மீது மிகவும் ஆர்வம் காட்டினால்கூட, பெண் பிள்ளைகளைவிட ஆண் பிள்ளைகளுக்குத் தான் கணினிகளை வாங்கிக் கொடுத்தனர்**

இந்நிலையைமாற்ற, தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ள பெண் குழந்தைகளுக்குப் பெற்றோர் ஸ்பார்க்கி (SparkiThe Easy Arduino DIY Robot) போன்ற ரோபோக்களை வாங்கிக்கொடுக்கலாம். ப்ரோகிராமிங் (Programming), ரோபாட்டிக்ஸ் (Robotics), எலெக்ட்ரானிக்ஸ் (Electronics) போன்றவற்றை குழந்தைகளுக்கேற்ற வண்ணம் எளியவகையில் ஸ்பார்க்கி ரோபோ கற்றுக்கொடுக்கும்.

குழந்தைப் பருவத்திலிருந்து நம் சமூகத்தில் நிலவும் பாலின வேறுபாடுகள்தான் கணினித்துறையின் இந்நிலைக்குக் காரணம். எனவே, கணினித்துறை மட்டுமல்லாமல் அனைத்துத் துறைகளிலும் பாலின சமத்துவத்தை நிலைநாட்ட நம் குழந்தைகளை ஆண்களாகவோ, பெண்களாகவோ வளர்க்காமல், மனிதர்களாக வளரவிடுவோம்! பாலின சமத்துவத்தை வென்றெடுப்போம்!!

ஆதாரம்: http://www.amightygirl.com, திஇந்தியன்எக்ஸ்பிரஸ்

தகவல்: **பிரபாகரன் அழகர்சாமி**






என்ன தான் டெல்லி கிரிக்கெட் சங்கமாக இருந்தாலும், ஒரு லேப் டாப்பையோ, பிரிண்டரையோ , சொந்தமாக வாங்கிக் கொள்ள முடியாமல் வாடகைக்கு எடுக்கும் அளவுக்கு இந்தியப் பொருளாதாரம் மோசமாக இருந்தது காங்கிரஸ் ஆட்சியில்.

ஆம், அருண் ஜெட்லி தலைவராக இருந்த காலத்தில் டெல்லி கிரிக்கெட் சங்கத்திற்கு லேப்டாப்பை பதினாறாயிரம் ரூபாய்க்கும், பிரிண்டரை மூவாயிரம் ரூபாய்க்குமாய் தினசரி வாடகைக்கு வாங்கியிருக் கிறார்கள்.

எப்படியோ வராது வந்த மாமணியாக நரேந்திர மோடி தலைமையில் பா.ஜ.க ஆட்சி அமைந்ததால் தப்பித்தது டெல்லி கிரிக்கெட் சங்கம். எப்படினு கேட்டா அதான் அருண் ஜெட்லி நிதியமைச்சர் ஆகிவிட்டாரே, அட!! அப்படினா இந்தியாவோட நிலையின்னு யோசிச்சா.

நம்ம கவலையெல்லம் அது இல்லீங்க, அக்கா தமிழிசை 2016 ல் புனித ஜார்ஜ் கோட்டையில் காவிக்கொடி பறக்குமுன்னு சொன்னாங்களோ இல்லையோ, நம்மூர்ல ஆட்டோ ஓட்டிட்டு இருந்தவன் ஒருத்தன் ஆட்டோவை வித்துட்டு நாலு லேப்டாப்பும், பிரிண்டரும் வாங்கிட்டானே என்பதே.

# Beaf
## பீஃப் முதல்



டிசம்பர் 24 ம் தேதி இரவு தான் கேட்கப்பட்டது அந்தக்கேள்வி 2015ல் மட்டுமல்லாமல், இதுவரை தமிழ் தொலைக்காட்சி வரலாற்றிலேயே கேட்கப்பட்ட அதி புத்திசாலித்தனமான கேள்வி ( ? ) TR Style ல் சொல்வதென்றால் அருமையான கேள்வி, அற்புதமான கேள்வி, அதிரடியான கேள்வி, அதிர்ச்சியான கேள்வி . ( போதும் விட்டு விடலாம், காட்டாறு மொத்தமே 32 பக்கம் தான்) அந்தக் கேள்வி? அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆவதால் பெருகுவது பகுத்தறிவா? ஆன்மீகமா? ( ஆன்மீகம் தானே பெருகும் பிறகு ஏன் பெரியாரிஸ்டுகள் அதை முன்னேடுக்கிறார்கள் என்ற தொணியில் கேட்கப்பட்ட கேள்வி) ஆயிரம் இல்லை லட்சம் முறை பதில் சொல்லிவிட்டாலும் பெரியாரைக் கடவுள் மறுப்பு என்ற வட்டத்துக்குள்ளேயே சுருக்கிவிடும் பார்ப்பனச் சதியின் தொடர்ச்சியே அக்கேள்வி. ஆம், அந்தக் கேள்வியை கேட்டது சாட்சாத் ரங்கராஜ் பாண்டே தான்.







பீஃப் (BEAF) சாப்பிடறவங்கெல்லாம் நாட்டைவிட்டு பாகிஸ்தானுக்கு போயிடுங்க என மத்திய அமைச்சர் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டார் போலும், பீப் (PEEP) பாடல் பாடிய சிலம்பரசனின் அம்மா உஷா. நாங்க தமிழ்நாட்டை விட்டுக் கேரளா அல்லது கர்நாடகத்திற்குப் போய்ப் பொழச்சுக்கறோம் என்கிறார். ஆமாங்க அவர் சொல்வதிலும் ஒரு நியாயம் இருக்குதுங்க.

அட! அதென்ன நியாயம், அப்படின்னா 9 Volt Battery வாங்கி கொடுத்ததுக்காகத் தன் இளமை முழுவதையும், ஏன்? வாழ்நாள் முழுவதையும் கூட இன்னும் சிறையிலேயே கழித்துக்கொண்டிருக்கும் பேரறிவாளன் அவர்களின் தாயார் அற்புதம்மாள் வாழும் தமிழகத்தில் உஷா போன்றோர் இருக்க முடியுமா சொல்லுங்கள்?

ஆனாலும் பாருங்க நான் இதுவரைக்கும் நாட்டை விட்டுப் போறதுக்கு வழி மீனம்பாக்கமுன்னு தப்பாவே நினைச்சுட்டு இருந்தேன். இப்ப அது கோடம்பாக்கமுன்னு நிருபிச்சுட்டாங்க. ஒலக நாயகன் முதல் உள்ளூர் நாயகன் வரை...பீப்ப்ப்ப்ப்ப்ப்ப்ப்ப்





புரட்சி கலைஞருக்கு கலைஞரிடமிருந்து அழைப்பு என்பதாகக் களை கட்டிவிட்டது தமிழக அரசியல் சூழல். Vision 234 அப்படின்னு அ.இ.அ.தி.மு.க ஆரம்பிக்க, நமக்கு நாமே என தி.மு.க பதிலடி கொடுக்க, தை பொறந்தா வழி பொறக்கும் அப்படின்னு கேப்டன் முரசு கொட்ட.

யாரெல்லாம் கட்சியில் அடச்சே.. கூட்டணியில் இருக்காங்க அப்படின்னு பா.ஜ.க லேப்டாப்பில் தேட, நாங்க தான் மக்கள் நலக் கூட்டணி மத்ததெல்லம் மந்திரி நல கூட்டணி அப்படின்னு மதிமுக, வி.சி, கம்யூனிஸ்டுகள் சொல்ல மாற்றம் முன்னேற்றம் அப்படின்னு பா.ம.க மேல்முழி முழிக்க, ‘ ஐ ’ திரைப்பட பாணியில் சொல்வதென்றால், ‘அதுக்கும் மேல’ எங்க அண்ணன் சீமான் 234 தொகுதிக்கும் வேட்பாளர் அறிவிக்க,

இவங்கள விடுங்க, இதுக்கு நடுவே கொஞ்சம் இளைஞர்கள் சகாயம் 2016 என களத்தில் குதித்து இருக்கிறார்கள் . உங்களுக்குச் சொல்லிக் கொள்வது என்னவென்றால் 1928 ல் பெரியார் சொன்னதுதான்.

அரசியல் என்பது நம்மை யார் ஆள்வது என்பது பற்றியதல்ல. நம் மக்களுக்கு எந்த மாதிரியான ஆட்சி முறை இருக்க வேண்டும் என்பது பற்றியதே.

– 26. 02. 1928 குடிஅரசு.

அரசியல் செய்யலாம் வாருங்கள் இளைஞர்களே .

# Peep



## பீப் வரை





இவா இவாதான் பகவானுக்கு பூஜை செய்யணும், பெரியவா சும்மாவா சொல்லி வைச்சிட்டுப் போயிருக்கா எவா எவாளோ வந்து மந்தரம் சொன்னா எங்க கடவுளுக்குப் புரியுமாண்ணோ பிறகெப்படி கடவுள் உங்களுக்கு எல்லா சேமத்தையும் தருவாரு,

பகவானை நன்னா வேண்டிட்டு தட்டுல காணிக்கையைப் போடுங்கோ என பார்ப்பான் சொன்னபோது பய பக்தியுடன் தட்டுல காணிக்கையைப் போட்டபடி வெளியே வந்தான் தம்பி யுவராசு. போனவாரம்

கலி முத்திடுச்சோ இல்லையோ, கோவிலுக்கு வர்றப்ப ஸ்டைலா துணி போடுறேன்னு ஜீன்ஸ் போடறதென்ன, அடக்க ஒடுக்கமா வரவேண்டிய பொம்பளப் புள்ளைக லெக்கின்ஸ் போடறதென்ன, பகவானுக்கே அடுக்கலை. அதான் நீதிபதி ரூபத்துல வந்து இப்படி ஒரு தீர்ப்பைச் சொல்லியிருக்கார்.

அடடே.. பேஷா இருக்குங்கானு வேட்டியும் சட்டையும் என்றபடி தட்டை நீட்டிய பார்ப்பானிடம் . வழக்கமா போடற ஜீன்ஸ் போடலையோ இல்லையோ அதான் பர்சை காரிலேயே வச்சட்டு வந்துட்டேன் என்றான் தம்பி.. இது இந்த வாரம் .

அப்கானிஸ்தானிலிருந்து டெல்லி வர்ற வழியில் நடுவில் லாகூரில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பை சந்தித்து வந்திருக்கிறார் இந்திய பிரதமர் மோடி. அத்வானி முதல் அமெரிக்கா வெளியுறவுத்துறை...ஏன்? ஐ.நா சபை வரை இரு நாட்டு உறவில் முன்னேற்றம் என பாராட்ட, காங்கிரஸ் இது அபத்த சாகசம் எனச்சொல்ல, தமிழகக் காங்கிரஸ் தலைவர் இது மலிவான விளம்பரம் எனச் சொல்ல, சிவசேனாவோ மோடி மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமென சொல்ல,

இது யதார்த்தமான பயணமா? திட்டமிடப்பட்டதா? என இந்தியத் தொலைக்காட்சிகள் ஒரு பக்கம் பிரித்து மேய. ஒரு பயணத்தில் எப்படி உறவு மேம்படும்? இதனால் யாருக்கு என்ன பயன்? இப்படி ஆளுக்கொரு கேள்வி கேட்க? நான் சிவசேனா பக்கம் தான், ஆம்! மோடி மன்னிப்புக் கேட்டுத்தான் ஆக வேண்டும். காலம் காலமாக பாகிஸ்தான் திவிரவாதி களிமிடமிருந்து நம் தேசத்தைக் காப்பாற்றிய கேப்டன் விஜயகாந்திடமும், ஆக்ஷன் கிங் அர்ஜினிடமும்.




அர்ஜூன் ஓகே.

ஆனா கேப்டனுக்குத்தான் மன்னிப்பு அப்படிங்கற வார்த்தையே பிடிக்காதே என நீங்கள் கேட்டால் நான் பொறுப்பில்லை. மக்களே....



முருகப்பன்,
இளைஞர்களுக்கான
சமூக விழிப்புணர்வு மையம்,
திண்டிவனம்

# வன்கொடுமை தடுப்பு திருத்தச் சட்டம் 2014

## ஒரு அறிமுகம்

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மக்களின் நிலையைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகளில் ஒன்றுதான் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் – 1989 மற்றும் விதிகள் 1995.

இந்தச் சட்டம் இயற்றப்பட்டு 26 ஆண்டுகளாகியும் இதுவரை முறையாக அமல்படுத்தப்படவில்லை என்பது அனுபவத்தில் நேரடியாக காண்கின்ற உண்மைகளாகும். மிக மிகக் குறைந்த அளவிளான வழக்குகளில் தண்டனை, அதிக அளவிலான தள்ளுபடி வழக்குகள், வழக்கினை விரைந்து நடத்துவதற்கும், அதை ஒருங்கிணைப்பதற்குமான பணிகளில் போதிய அக்கறை செலுத்தாத அரசு வழக்கறிஞர்கள் என்பதுதான் நீதிமன்ற அனுபவங்களாக உள்ளது. மேலும், பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், செயல்பாட்டாளர்கள் மற்றும் அமைப்புகள் ஆகியோருக்கு கடந்த காலங்களில் கிடைத்த அனுபவங்களும் இந்தச் சட்டம் எந்த அளவுக்குச் செயல் படுத்தப்படுகிறது என்ற வினாவையே எழுப்புகின்றன.

இந்நிலையில் இச்சட்டம் நடைமுறைபடுத்தப்படுவது தொடர்பாக கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா முழுவதிலுமான பல மாநிலங்களில் பல்வேறு ஆய்வினை மேற்கொண்டது நீதிக்கான தேசிய தலித் இயக்கம். சட்டம் இயற்றப்பட்டு இத்தனை ஆண்டுகளாகியும் எந்தவொரு மாநிலத்திலும் முழுமையாக நடைமுறைபடுத்தப் பட்டதில்லை என்பதனைக் கண்டறிந்தது மட்டு மல்லாமல், சட்ட அமுலாக்கத்தில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்கி, கடுமையான சட்டப்பிரிவுகளை உள்ளடக்கிய புதிய சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்கும், விரைந்து நடைமுறைபடுத்தவும் தேசிய அளவில் முயற்சிகளை மேற்கொண்டது.

### திருத்தச் சட்டம் உருவானதன் பின்னணி

வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் விதிகளில் மேலும் கூடுதலான மற்றும் கடுமையான நடவடிக்கைகளை உள்ளடங்கிய திருத்தங்கள் தேவையென்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்த “நீதிக்கான தேசிய தலித் இயக்கம்” என்கிற அமைப்பு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள 500 க்கும் மேற்பட்ட தலித் மற்றும் பழங்குடி அமைப்புகள் மட்டுமல்லாமல் பல்வேறு சமூக ஆர்வலர்கள், இயக்கங்கள், குழுக்கள் போன்றவை களை ஒருங்கிணைத்து 2009 ஆம் ஆண்டு “வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை வலுப்படுத்துவதற்றான தேசியக் கூட்டமைப்பு” தொடங்கப் பட்டது. இக்கூட்டமைப்பில் தமிழகத்தில் சுமார் 85 க் கும் மேற்பட்ட அமைப்புகள் உள்ளன.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களை விளக்கி, கொள்கைத் திட்டங்கள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்து மாதிரி வரைவு மசோதா தயாரித்து 2009 முதல் நாடு முழுவதும் கூட்டமைப்பின் சார்பில் தொடர் பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டது. இதன் விளைவாக 2013 டிசம்பர் மாதம் திருத்த மசோதா நாடாளு மன்றத்தில் அறிமுகப்படுத்தப் பட்டும், அப்போதிருந்த அரசியல் சூழல் காரணமாக நிறைவேறவில்லை. உடனடியாகச் சட்டமாக்கக்கோரி பல்வேறு போராட்டங்கள் டெல்லியில் மேற்கொள்ளப்பட்டன.

இதன் தொடர்ச்சியாகவும், நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிய நிலையிலும் அப்போதைய காங்கிரஸ் அரசு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத் திருத்தங்களுக்கான அவசரச் சட்டம் ஒன்றை 04.03.2014 ல் கொண்டு வந்தது. தேர்தல் முடிந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறமுடியாத நிலையில் அவசரச் சட்டமும் காலாவதியானது.

இதனால் தற்போதைய பா.ஜ.க அரசு அவசரச் சட்டத்தின் அனைத்து அம்சங்களையும் அப்படியே எவ்வித திருத்தங்களும் இன்றி “வன்கொடுமைத் தடுப்புச் சட்டத் திருத்த மசோதா 2014” வெளியிட்டு கடந்த 4.8.2015 நாடாளு மன்றத்தில் மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரம் வழங்கல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட் அறிமுகப்படுத்திப் பேசினார். எவ்வித எதிர்ப்பும் இன்றி மசோதா மக்களவையில் நிறைவேறியது. இந்நிலையில் மேற்படி மசோதா நேற்று 21.12.2015 அன்று மாநிலங்கள் அவையிலும் எவ்வித எதிர்ப்பும் இன்றி அனைவரின் ஆதரவோடும் ஒரு மனதாக நிறைவேறியது.

இதனைத் தொடர்ந்து இந்திய ஜனாதிபதி அவர்கள் இச்சட்டத்தில் கையெழுத்திட்டு, இதுபற்றிய அறிவிப்பு அரசிதழில் வெளியானதும் சட்டம் நடமுறைக்கு வரும். அதன்பிறகு அதற்கான விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

**விரிவு படுத்தப்பட்டுள்ள சட்டப் பிரிவுகள்:**

**1. புதிய 19 வகையான வன்கொடுமை வடிவங்கள் குற்றங்களாக சேர்க்கப்பட்டுள்ளது**

உதாரணத்திற்கு

- தலையை மொட்டையடித்தல், மீசையை அகற்றுதல், முகம் அல்லது உடலில் வண்ணம் பூசுதல்.
- தலித் - பழங்குடிப் பெண்களின் ஆடைகளளைக் களைவது; பெண்களுக்கு எதிராகப் பாலியல் ரீதியாக உள்நோக்கத்துடன் விருப்பமின்றித் தொடுவது, வார்த்தைகளைப் பயன்படுத்துவது, செய்கைகள் மற்றும் சமிக்ஞைகள் செய்வது.
- தலித் மற்றும் பழங்குடியினரின் புனிதச் சின்னங்களை அல்லது சிலை, உருவப்படங்களை கேவலப்படுத்துதல்.

**2. வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் கடமைகள்**

- பாதிக்கப்பட்டோர் அளிக்கின்ற புகாரை அப்படியே பதிவு செய்யாமல் இருப்பது.
- வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் பொருத்தமான பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யாமல் இருப்பது.

**3. பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கான உரிமைகள்**

- குற்றப்பத்திரிகை நகல் இலவசமாக வழங்கப்படவேண்டும்.
- பாதிப்புற்றோர் உதவிக்காக வழக்கறிஞர் மட்டுமல்லாமல் சமூக அமைப்பு அல்லது தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் அதிகாரிகளிடம் பேசுவதற்கான வாய்ப்பு.
- தண்டனைக்குறிய குற்றங்கள் தொடர்பாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 32 பிரிவுகள் சேர்க்கப்பட்டு புதிய அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது.

**4. தனி சிறப்பு நீதிமன்றங்கள்**

- வழக்குகளை விரைவாக விசாரிக்கவும், விரைந்து முடிக்கவும் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு நீதிமன்றங்கள்.
- ஒவ்வொரு நாளும் விசாரணை. தனி சிறப்பு அரசு வழக்கறிஞர்களையும் நியமிப்பது.
- குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மாதங்களில் வழக்கினை விரைந்து முடிக்க அதிகாரம்.
- குற்றஞ்சாட்டப்பட்டோருக்கு ஏற்கனவே பாதிக்கப்பட்டோருடன் அறிமுகம், தொடர்பிருந்து குற்றம் நிகழ்ந்தால் அதை தெரிந்தே குற்றம் செய்ததாக நீதிமன்றம் கருதும் என்பதும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டாலும் ஜனாதிபதி அவர்கள் கையெழுத்திட்டு, அரசிதழில் வெளியானபிறகு சட்டம் நடைமுறைக்கு வரும். தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் 1989ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தாலும் அதற்கான விதிகள் 6 ஆண்டுகள் கழித்து 1995 ஆம் ஆண்டுதான் உருவாக்கப்பட்டன. இதுபோன்ற கால தாமதம் நிகழ்த்தாமல் அரசு உடனடியாக திருத்தச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்து, விதிகளை உருவாக்கவேண்டும்.





# 9,11 - தொலைந்த கணிதம்

ஒரு முறை குடும்பச் சுற்றுலா சென்றபோது வட்டமாக நின்று கொண்டு வரிசையாக எண்கள் சொல்லி விளையாடும் விளையாட்டில் 3 மற்றும் அதன் மடங்குகளை சொல்பவர்கள் வட்டத்திலிருந்து வெளியேற வேண்டும், அப்படி 9 என்று சொல்பவர்கள் வட்டத்திலிருந்து வெளியேறுவார்கள். அதுபோல, தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகள் விளையாடும் மார்க் வியாபார விளையாட்டில் 9, 11 சொன்னால் வெளியேற்றம். அரசுப் பொதுத் தேர்வுகளான 10 மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாணவர்களை அதிக மதிப்பெண்கள் வாங்க வைக்க வேண்டும். அதிக மதிப்பெண் பெற்ற பள்ளி என்று பிரச்சாரம் செய்து கொள்ளையை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் குறுக்குவழியில் 9, மற்றும் 11 ஆம் வகுப்புப் படங்களைப் புறக்கணித்து, நேரடியாக 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பாடங்களை நடத்துகின்றன.

10 வகுப்புப் பாடத்திற்கு அடிப்படையான சில பாடங்கள் 9 வகுப்பில் உள்ளன. அதுபோல 12 வகுப்புப் பாடங்களைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் 11 ஆம் வகுப்பில் சில பாடங்களை அவசியம் படித்திருக்க வேண்டும். குறிப்பாக கணிதத்தில் அவ்வாறு தொலைந்து போன பாடங்களையும் மறைக்கப்படும் அடிப்படைகளையும் பற்றிக் காண்போம்.

9-10 ம் வகுப்பு

| **1.கணங்கள்** | |
|---|---|
| 9 ம் வகுப்பு<br><br>கணத்தை வரையறுத்தல்,<br>கணங்களை குறிப்பிடும் முறைகள்<br><br>பல்வேறு வகையான கணங்களை<br>அடையாளம் காணுதல்<br>கணச்செயல்களை புரிந்து கொள்ளுதல்<br><br>கணங்கள் மற்றும் கணச்செயல்களை<br>வென்படங்களில் குறிக்க கற்றுக் கொள்ளுதல் | 10 ம் வகுப்பு<br><br>கணச்செயல்பாடுகளின் பண்புகள்<br>டீ மார்கன் விதி அதன் எடுத்துக்காட்டுகள் மற்றும்<br>வென்படம் மூலம் சரிபார்த்தல்<br><br>n(AUBUC) சூத்திரம் |

n(AuB) க்கான சூத்திரம்

இதில் 9 ம் வகுப்பில் வரும் கணச்செயல்பாடுகளை எளிமையாக புரிந்துக் கொள்ள முடியும். அதே போல வென்படங்களில் கணங்களைக் குறிக்கக் கற்றிருந்தால் தான், டீமார்கன் விதியினை வென்படம் மூலம் சரிபார்க்கவும், n(AuB) சூத்திரத்தைப் பற்றியும் எளிமையாகப் புரிந்து கொள்ள இயலும்.

2. இயற்கணிதம்

| 9 ம் வகுப்பு | 10 ம் வகுப்பு |
|---|---|
| பல்லுறுப்புக் கோவையை வகைப்படுத்துதல்<br>மீதி தேற்றத்தை வகைப்படுத்துதல்<br>காரணித் தேற்றத்தை பயன்படுத்துதல்<br>இயற்கணித முற்றொருமையை பயன்படுத்துதல்<br>பல்லுறுப்புக் கோவையை காரணிப்படுத்துதல்<br>இரு மாறிகளில் உள்ள நேரிய சமன்பாடுகளை தீர்த்தல்<br>ஒரு மாறியில் உள்ள அசமன்பாட்டை தீர்த்தல். | இரு மாறிகளில் அமைந்த ஒருங்கமை நேரியல் சமன்பாடுகள்<br>இருபடி பல்லுறுப்புக் கோவைகள்,<br>தொகுமுறை வகுத்தல்<br>விகிதமுறு எண்களின் அடிப்படை செயல்பாடுகள். |

இங்கு 9 ம் வகுப்பில் வரும் இரு மாறிகளில் உள்ள நேரியச் சமன்பாடுகளைத் தீர்க்கத் தெரிந்தால் 10 ம் வகுப்பில் உள்ள இரு மாறிகளில் அமைந்த ஒருங்கமை நேரியல் சமன்பாடுகளின் தீர்வுகளைக் கணக்கிட இயலும். மேலும் காரணித்தேற்றம், மீதித்தேற்றம், பல்லுறுப்புக் கோவைகளைக் காரணிப்படுத்துதல் பற்றி நன்கு அறிந்து இருந்தால் தான் 10 ம் வகுப்பில் உள்ள இருபடி பல்லுறுப்புக் கோவையையும் தொகுமுறை வகுத்தலுக்கும் தீர்வு காண இயலும்.

3. முக்கோணவியல்

| 9 ம் வகுப்பு | 10 ம் வகுப்பு |
|---|---|
| முக்கோணவியல் விகிதங்களை அறிதல்<br>நிரப்பு கோணங்களின் முக்கோணவியல் விகிதங்களை அறிதல்<br>முக்கோணவியல் அட்டவணையை பயன்படுத்துதல் | முக்கோணவியல் முற்றொருமைகள்<br>உயரங்களும் விகிதங்களும் |

முக்கோணவியல் விகிதங்கள், நிரப்பு விகிதங்கள், அட்டவணையைப் பற்றி நன்கு அறிந்து இருந்தால் தான் முக்கோணவியல் முற்றொருமைகள் மற்றும் உயரங்களும் விகிதங்களும் பகுதியில் உள்ள வினாக்களுக்கு விடையளிக்க முடியும்.

4.செய்முறை வடிவியல்

| 9 ம் வகுப்பு | 10 ம் வகுப்பு |
|---|---|
| சுற்றுவட்டம் வரைதல்<br>குத்துக்கோட்டு மையம் வரைதல்<br>உள் வட்ட மையம் வரைதல்<br>நடுக்கோட்டு மையம் வரைதல் | வட்டங்களுக்கு தொடுகோடு வரைதல்<br>முக்கோணம் வரைதல்<br>வட்ட நாற்கரம் வரைதல் |

சுற்று வட்டம் வரையத் தெரிந்து இருந்தால் தான் 10 ம் வகுப்பில் உள்ள முக்கோணம் வரைதல் பகுதியில் வரும் வடிவியல் கணக்குகளை வரைய முடியும். மேலும் குத்துக்கோட்டு மையம் வரைவதற்கு நாம் அறிந்து இருப்பின் நம்மால் வட்ட நாற்கரத்தை எளிதாக வரைய இயலும்.

5. வரைபடங்கள்

| 9 ம் வகுப்பு | 10 ம் வகுப்பு |
|---|---|
| வரைபட கருத்தினை புரிதல்<br>நேரிய சமன்பாட்டின் வரைபடம் வரைதல்<br>இரு மாறிகளை கொண்ட நேரியச் சமன்பாடுகளின் தீர்வு காணல் | இருபடி சமன்பாடுகளின் வரைபடங்கள்<br>சில சிறப்பு வரைபடங்கள் |

வரைபடக் கருத்தினைப் புரிதல், நேரியச் சமன்பாட்டின் வரைபடம் வரைதல், மற்றும் இரு மாறிகளை கொண்ட நேரியச் சமன்பாடுகளின் தீர்வு காணல் இவைகளைப் பற்றிய புரிதல் இருப்பின் இருபடிச் சமன்பாடுகளின் வரைபடங்களை நாம் எளிதில் வரைய இயலும்.

## 11 ம் மற்றும் 12 ம் வகுப்புக்கான பாடத்திட்டம்

### 1. அணிகள்

| 11 ம் வகுப்பு | 12 ம் வகுப்பு |
|---|---|
| அணிகளும் அணிக்கோவைகளும் | அணிகள் மற்றும் அணிக்கோவை பயன்பாடுகள். |

11 ம் வகுப்பில் அணிகளின் வரையறைகள் மற்றும் அதன் மீதான செயல் முறைகள் அதன் பண்புகள் பற்றி தெரிந்து இருந்தால் தான் அணிகள் மற்றும் அணிக்கோவை பயன்பாடுகளை எளிதில் புரிந்து கொள்ள இயலும்.

### 2. வெக்டர் இயற்கணிதம்

| 11 ம் வகுப்பு | 12 ம் வகுப்பு |
|---|---|
| வெக்டர் வகைகள், அதன் அடிப்படைச் செயல்பாடுகள் | வெக்டர் பெருக்கம், கோடுகள், தளங்கள் இன்னும் சில |

வெக்டரின் அடிப்படைச் செயல்பாடுகள் முழுதும் தெரிந்து இருந்தாலே வெக்டர் பெருக்கம், கோடுகள், தளங்கள் பற்றி எளிமையாக கற்க இயலும்.

மேலும் 9ம், 10 ம் வகுப்புக்கான பாடத்திட்டத்தில் உள்ள முக்கோணவியலின் தொடர்ச்சியே 11 ம் வகுப்பில் வரும் திரிகோணமிதி ஆகும்.

11 ம் வகுப்பில் படிக்கும் வகை நுண்கணிதம் என்ற பாடப் பகுதியின் தொடர்ச்சி 12ம் வகுப்பில் வகை நுண்கணிதப் பயன்பாடுகள் பகுதி 1 மற்றும் பகுதி 2 ம் வருகின்றன. 11 ம் வகுப்பில் வகை நுண்கணிதத்தில் வரும் சூத்திரங்கள் தெரிந்திருந்தால் மட்டுமே 12 ம் வகுப்பில் வகை நுண்கணிதப் பயன்பாடுகளில் வரும் வினாக்களுக்குத் தீர்வு காண இயலும். இதே போல தான் தொகை நுண்கணித பாடப் பகுதியும் அமைந்துள்ளது.

மேலே கூறியவையிலிருந்து 9 ம் வகுப்பு கணிதப் பாடத்தைத் தெரிந்து இருந்தாலே 10 ம் வகுப்பில் கணிதப் பாடத்தை எளிமையாகப் போட இயலும், 11 ம் வகுப்பில் கணிதப்பாடத்தின் தொடர்ச்சியே 12 ம் வகுப்பில் தொடர்கிறது.

ஆனால் தற்போது தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகள் 9 ம் வகுப்பு மாணவர்களுக்கு 10 ம் வகுப்புப் பாடத்தையும், 11 ம் வகுப்பு மாணவர்களுக்கு 12ம் வகுப்புப் பாடத்தையும் நடத்துகின்றன. 10 ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பில் அவர்களுக்கு வருடம் முழுவதும் தேர்வு வைத்து அவர்கள் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் எடுக்க வைப்பதற்கான பயிற்சி மட்டுமே அளிக்கப்படுகிறது. இதனால் மாணவர்களின் மனனம் செய்யும் திறனே அதிகரிக்கிறது. கணிதத்தின் அடிப்படைகள் புரிவதில்லை.

10, 12 வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்காக ஆரோக்கியமற்ற முறையில் கற்றுத்தரும் இம்முறையால் அம்மாணவர்கள் பொறியியல் பயிலக் கல்லூரி செல்லும்போது மிகப்பெரிய சிக்கல்களைச் சந்திக்கின்றனர். படிப்படியாக ஏறுவதுதான் இயல்பு இரண்டு, இரண்டு படியாக ஏறுபவன் வேகமாக ஏறுவதுபோல் தெரிந்தாலும் இலக்கை அடைய முடியாமல் சோர்வடைவான். தெளிவாகவும் அழுத்தமாகவும் படிப்படியாக படியேறுவோம்.

**தான் உயர்ந்த சாதி, மற்றவன் தாழ்ந்த சாதி என்று பார்ப்பான் மட்டுமல்ல, வேறு எவன் நினைத்தாலும் அவன் பார்ப்பனிய வெறி பிடித்த நாசக்காரர்கள், கொடுமைக்காரர்கள் என்றே மதித்தல் வேண்டும். அவர்கள் யாராக இருப்பினும் சமுதாயத் துரோகிகளாக பாவித்தல் வேண்டும்.**

– தோழர் பெரியார், 23.11.1948 விடுதலை.

**என்னைப் பொறுத்த வரையிலும் நான் என்றும் கட்சிகாரனாக இல்லவே இல்லை. எப்போதும் நான் கொள்கைக்காரனாகவே இருந்தேன்.**

– தோழர் பெரியார், 01.06.1954 விடுதலை.

**சாதிகள் கடவுளால் உண்டாக்கப் படாமல் எப்படி உண்டாயிற்று என்று ஆத்திகர்களாவது ஆதாரத்துடன் பதில் சொல்லட்டும் கீதை, இராமாயணம், மனுதர்மச் சாத்திரம், பராசரமிருதி, வேதம் ஆகியவைகளை நெருப்பில் பொசுக்கத்துணிவது தான் சாதி ஒழிப்பு.**

– தோழர் பெரியார், 28.03.1950 விடுதலை.

**உயர்சாதி ஆணவமும் அதைத் தாங்கி நிற்கும் பழக்க வழக்கம் என்னும் துண்களும் என்று சரிந்து விழுந்து தரைமட்டமாகிறதோ அன்றே நம் நாடும் மக்களும், நம் நாட்டு நாகரிகமும் தழைத்தோங்க முடியும்.**

– தோழர் பெரியார், 23.11.1948 விடுதலை.

# ‘பொட்ட ...’

**தமிழ்வாணன்**
பெரியாரியப் பெண் விடுதலை இயக்கம்

டேய் பொட்ட . . . என்னடா பொட்ட . . . போடா பொட்ட . . . பொட்டைங்க தான் அப்படி பண்ணும் . . .

எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கா ?? எல்லாம் நம்ம தனுஷ், விஷால் படத்துல தாங்க. பொட்ட என்றால் என்னவென இவர்களுக்கும், அவ்வார்த்தையை பயன்படித்துபவர்களுக்கும் சுத்தமா தெரியாது. சிலர் பொட்ட என்றால் கோழை என நினைக்கிறார்கள். சிலர் திருநங்கையர்கள் என நினைக்கிறார்கள். சிலர் பெண்கள் என நினைக்கிறார்கள். சிலர் தன்பாலினச் சேர்க்கையாளர்கள் என நினைக்கிறார்கள். ஆக, சுற்றிச் சுற்றிப் பெண் தன்மை என்பதைத் தான் இவர்கள் சொல்லவருகிறார்கள்.



ஆமாங்க . . . என்ன ‘பொட்ட’ னு திட்டிய இந்துத்துவவாதிகளும் உண்டு, வெகுஜனங்களும் உண்டு. அட பகுத்தறிவாளர்கள் கூடப் பொட்டனு திட்றாங்க! சரி பொட்ட னா என்ன?

‘பெட்டை’ என்கிற சொல்லின் வெகுஜன வாரத்தையே பொட்டை. ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்க எனப் பாடிய பாரதிகூட மீசையை முறுக்கிக்கொண்டு, ஆண்களைப் பெட்டை எனத் திட்டியதுண்டு. ஆணைப் பார்த்தே பொட்ட னு திட்றோம். அட பெண்களே ஆண்களை திட்டனும்னா பொட்ட னு திட்டிட்றாங்க.

ஒரு ஆணை, பெண் என கூறுவதன் மூலம் அப்படி என்ன சொல்ல வருகிறோம்? நாம்... ஆண் தன்மை என்பதை மதிப்புக்குரிய தன்மை எனவும் , பெண் தன்மையை அதற்கு நேர்மாறான தன்மை எனவும் கருதுகிறோம். அதாவது பெண்ணுக்கென கலாச்சாரப் போர்வையில் ஒதுக்கப்பட்டிருக்கும் வேலைகள் அனைத்தையும் பெட்டை தன்மை உள்ளடக்குகிறது.

சமையல், கோலம் போடுதல், துணி துவைத்தல், குப்பை பெருக்குதல் ஆகிய வேலைகளைப் பெட்டை வேலைகள் எனவும், பணம் சம்பாதித்தல், சண்டை இடுதல், பொருள் சேர்த்தல் ஆகியன ஆண்டை வேலைகள் எனவும் கருதப்படுகிறது. பகுத்தறிந்து பார்த்தால் இரு வேலைகளையும் இருவராலும் செய்ய முடியும். ஆனால் இவைகள் ஒரு பாலினத்திற்கு ஒன்று என ஒதுக்கியதில் மிக பெரிய அளவில் ஆணாதிக்கம் உள்ளது. பெண்ணை ஒரு கட்டத்தில் அடக்கி வைக்கவே அவளுக்கான வேலைகளையும் அங்கேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வேலைகளை ஒரு ஆண் செய்யும் போது அவனை, பொட்ட மாதிரி பண்ற... பொட்ட வேல பாக்குற... என்று அழைக்கிறார்கள். இது ஆணுக்கான கேவலம் எனக் கருதப்படுகிறது. ஒரு பெண் ஆணுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வேலைகளை செய்யும் போது, ஆம்பள மாதிரி பண்ற... ஆம்பள வேல பாக்குற... என்று அழைக்கப்படுகிறது. இது பெண்ணுக்கான கௌரவம் எனக் கருதப்படுகிறது.

மேலும் பலம், கோபம், சீற்றம் கொண்ட பெண்ணை ஆண்மை கொண்ட பெண் எனவும், பயம், அமைதி, அடக்கம் கொண்ட ஆணை பெண்மை கொண்ட ஆண் எனவும் வெகுஜன பாஷையில் அழைக்கப்படுகிறது. பல இடங்களில் ஆணின் இயலாமையைத் தான் இன்னொரு ஆண் பொட்ட என திட்டுகிறான். ஒரு ஆணின் இயலாமையை குறிக்கக் கூடப் பெண்மையைக் கையில் எடுக்கும் இயலாமை தான் ஆணிடம் உள்ளது.

இவர்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். ஆண்கள் செய்யும் எல்லா வேலைகளையும் பெண்களால் செய்ய முடியும். ஆனால் பிள்ளை பெறுதல் என்பதைப் பெண்களால் மட்டுமே முடியும். ஆணால் 3 எலும்புகள் உடையும் அளவு வலியை தான் தாங்க முடியும். பெண்ணால் 7 எலும்புகள் உடையும் அளவு வலியைத் தாங்க முடியும். ஆண்களைக் காட்டிலும் பெண்களே நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் கொண்டவர்கள்.

பெண்களாலே அதிகம் வளைய முடியும். பெண்களாலே பாரத்தை அதிக நேரம் தாங்கிக்கொள்ள முடியும். பெண்களாலே அதிக ஞாபகம் வைத்துக்கொள்ள முடியும். பெண்களுக்குப் பதட்டம், கோபம், பரபரப்பு ஆகிய குணங்கள் குறைவு. பெண்களாலே ஆண்களைக் காட்டிலும் பூமியில் அதிக நாட்கள் வாழ முடியும். ஆனால் நாம் எந்தக் கணக்கை வைத்துப் பெண்தன்மை என்பதை இழிவெனக் கருதுகிறோம் என எப்போதும் சிந்திப்பதில்லை.

சுற்றிச் சுற்றிப் பெண்களை வார்த்தைகளால் வன்புணர்ந்துக்கொள்ளும் நமக்கு இன்னொரு ஆணைத் திட்டக்கூடப் பெண்ணைத் தான் இழுக்க வேண்டிய அயோக்கியகுணம் உள்ளது. ஆக, ஆணின் இயலாமைத் தன்மையைப் பெண்மை எனக் குறிக்கும் முட்டாள்களைப் பார்த்து நாம் சிரித்துக்கொண்டே செல்ல வேண்டுமே ஒழிய அதை இழிவென ஒரு போதும் கருதிவிட வேண்டாம். யாரேனும் நம்மைப் பொட்டை எனத் திட்டினால் கோபப்படாதீர்கள். புன்னகை விடுங்கள். அடடா... நம்மைப் பெண் என சொல்லிவிட்டானே என! ஏனென்றால் பெண் தன்மை இழிவானதல்ல!!

கிருபா நந்தினி
சூழலியல் ஆராய்ச்சியாளர்



# காலநிலை மாற்ற பாதிப்பு:
## மன்னார் வளைக்குடாவில் இருந்து கூடங்குளம் வரை

இயற்கை என்பது நீரில் தொடங்கி மனிதர் வரை அனைத்தும் அடங்கியது. இவையனைத்தும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக விளங்குகின்றன. அனைத்து உயிரினங்களும் சுற்றுச்சூழலுக்கேற்பத் தன்னை இயற்கையாகவே தகவமைத்துக் கொண்டு வாழ்கின்றன. இதில் உணவுச் சங்கிலியின் மேலிருக்கும் மனித இனம் மட்டும் தற்போது தனக்கேற்ப இயற்கைச் சூழலை மாற்றியமைக்கும் வேளையில் ஈடுப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படி மாற்றினால் ஏற்படும் பாதிப்புகள், அதற்கான மாற்றுவழி அல்லது தீர்வு, அத்தீர்வை நடைமுறைப் படுத்தாவிடில் வரும் விளைவுகள் இவையனைத்தையும் அறிந்தும், கண்முன்னே அதன் பாதிப்புகளை அனுபவித்தும் கூடத் தம்மை இயற்கையுடன் ஒன்றிணைத்து வாழ மறுக்கிறது மனித இனம்.

இப்புவியில் உள்ள இயற்கைக் கூறுகள் எதுவும் இப்புவியை நச்சாக்கும் தன்மை கொண்டது அல்ல. ஆனால் இப்படிப்பட்ட அமைப்பை உணவுச் சங்கிலியின் மேல் நிலையில் உள்ள மனிதர்களாகிய நாம் தலைகீழாக மாற்றி விட்டோம். வளர்ச்சி நோக்கங்களுக்காக, இயற்கைக்கு முரணான முறைகளைக் கையாண்டு நீர், நிலம், காற்று என்கிற மூன்று அடிப்படைகளையும் அழித்து வருகிறோம். இதனால் புவியில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. குறிப்பாகக் காற்று மண்டலத்தில் இருக்கும் கார்பன் - டை ஆக்சைடு, நீராவி, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன் இவையனைத்தும் இப்புவியிலுள்ள அனைத்து உயிரினங்களும் வாழத் தகுந்த வெப்பத்தைத் தொடர்ந்து தக்கவைத்துப் பராமரித்து வருகின்றன. பொதுவாக 90 சதவிகித வெப்பத்தை இயற்கையாகவே உள்வாங்கிக் கொள்ளும் திறன் படைத்த இந்த அமைப்பை மனித இனம் தம் நடவடிக்கைகளின் காரணமாக .இன்று சீர்க்குலைத்து விட்டது.

எந்த மனிதச் செயற்பாடுகளால் இந்த வாயுக்கள் மாற்றமடைந்ததோ அதே மனிதர்களால் தற்போது எங்குத் திரும்பினும் உச்சரிக்கப்படும் வார்த்தைகளாகப் பசுமைக்குடில் விளைவு, புவி வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை விளங்குகின்றன. பசுமைக்குடில் வாயுக்களில் 3.618 விழுக்காடு இருக்க வேண்டிய கார்பன்-டை-ஆக்சைடானது இன்று 72.369 விழுக்காடு என்கிற அளவுக்குப் பெருகியிருக்கிறது. 0.360 விழுக்காடு இருக்க வேண்டிய மீத்தேன், 7.199 விழுக்காடு என்கிற அளவுக்குப் பெருக, 0.950 விழுக்காடு இருக்க வேண்டிய நைட்ரஸ் ஆக்சைடு 19.00 விழுக்காடும், 0.072 விழுக்காடு மட்டுமே இருக்க வேண்டிய குளோரோ ப்ளோரோ கார்பன்கள் 1.432 விழுக்காடுமாக அதிகரித்திருக்கின்றன என **U.S inventory Green house gas emission and sinks** என்ற அமைப்பின் தகவல் தெரிவிக்கிறது. இது 2015 ஆம் ஆண்டுக் கணக்காகும்.

உலகின் பல பகுதிகளில் காலநிலை மாற்றப் பாதிப்புகள் தொடரும் வேளையில் தமிழ்நாட்டின் 1076 கி. மீட்டருக்கு நீளும் கடற்கரையில் அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த மன்னார் வளைக்குடாப் பகுதியையும், அதன் தெற்கே கடற்கரையை ஒட்டியே அமைந்துள்ள அணு உலை அமைந்துள்ள பகுதியான கூடங்குளத்தையும் தன் குவிமையமாக இக்கட்டுரை எடுத்துக் கொள்கிறது.

**மன்னார் வளைக்குடா:**

10,500 சதுரக் கிலோ மீட்டர் பரப்புள்ள மன்னார் வளைக்குடாப் பகுதி இந்தியாவின் மிகச் சிறந்த கடலுயிரினக் கோளமாகும். இது பவளப் பாறைகள் நிறைந்த பகுதி. இங்கு மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அரிய கடல் வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன. இந்த உயிரினங்கள் வாழும் பகுதியை மாநில அரசு 1986 ல் கடல்வாழ் உயிரின தேசிய பூங்காவாக அறிவித்தது. இதைத் தொடர்ந்து 1989ல் இதனை உயிர்க்கோளப் பகுதியாக மத்திய அரசும் அறிவித்தது. யுனெஸ்கோ இதனை அங்கீகரித்துள்ளது.

இந்த மன்னார் வளைக்குடாப் பகுதியில் கடந்த நூற்றாண்டிலேயே வெப்பநிலையில் 0.1 முதல் 0.90 பாகை செல்சியஸ் வரை மாற்றம் ஏற்பட்டுள்ளது. 1971ஆம் ஆண்டிலிருந்து 2010ஆம் ஆண்டு வரை 0.56 முதல் 2.26 பாகை வரை வெப்பநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. உலக அளவில் ஏற்பட்டுள்ள வெப்பநிலை அளவை வைத்துப் பார்த்தால், மன்னார் வளைக்குடாப் பகுதியில் வெப்பநிலை வேகமாக

அதிகரித்து வருவதை இராமேஸ்வரம் பாம்பனில் நாசா எடுத்துக் காட்டியுள்ள புள்ளி விபரங்களில் இருந்து தெரிந்து கொள்ள முடியும். (பொன்.தனசேகரன்)

இந்த வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக வளி மண்டலத்தில் கார்பன் டை ஆக்சைடின் அளவு அதிகரிப்பதால், அது கடல் நீரில் கரையும் அளவும் அதிகரிக்கிறது. இதனால் கடல் நீர் மேலும் அமிலத்தன்மை கொண்டதாக மாறுகிறது. இதனால் பவளப் பாறைகள் பாதிக்கப்படுகின்றன மேலும் கடலின் வெப்பநிலை அதிகரிப்பும் ஒரு முக்கியக் காரணமமாக இருக்கிறது. இதனால் கடல் இயற்கைச் சூழலும், உயிரினங்களும் மிகப் பெரிய மாற்றங்களை அடைந்துள்ளன. இந்த உயிரினங்களில் மிக முக்கியமானதாகப் பவளப் பாறைகள் விளங்குகின்றன.

**பவளப்பாறைகள்:**

மன்னார் வளைகுடாப் பகுதியில் 82 வகைப் பவளப்பாறைகள் காணப்படுகின்றன. இதில் Fringing Reef வகைப் பவளப்பாறைகளே அதிகம் காணப்படுகின்றன. Montipora Sp, Acropora Sp, Pocillopora Sp, Montipora millepora, Monntipora jonesi, Montipora manauliensis, Montipora edwards, Montipora exserta, Acropora vudis, Acropora valeniemesi, Acropora microphthalna, Porites exserta & Porites mannavensis – ஆகிய இப்பவளப் பாறை வகைகள் மன்னார் வளைகுடாவில் மட்டுமே காணப்படுகிற வகைகளாகும். இந்தளவுக்குத் தனித்துவமிக்கக் கடலுயிரிக் கோளமாக விளங்கும் விளங்கும் இம்மன்னார் வளைக்குடா, இன்று காலநிலை மாற்ற .பாதிப்பைச் சந்திப்பது ஒரு வருந்ததக்கச் செய்தியாகும்.

மன்னார் வளைக்குடாவின் வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாகப் பவளப் பாறைகளை ஒட்டி அதற்கு உணவாக இருக்கும் கடலில் உள்ள தாவர நுண்ணுயிர் (Zooxanthellae) அங்கிருந்து வெளியேறி விடுகிறது. இதனால் பவளப் பாறைகள் 'பிளீச்சிங்' எனும் வெளுப்புக்கு ஆளாகின்றன. இது குறித்து, சுகந்தி தேவதாசன் மெரைன் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் இயக்குநர் ஜே. பேட்டர்சன் எட்வர்ட் கீழ்கண்டவாறுக் கூறுகிறார்.

"இருக்கின்ற வெப்பநிலையில் ஒரு பாகை அளவுக்கு வெப்பநிலை அதிகரித்தாலும் கூடப் பவளப் பாறைகள் வெளுப்புக்கு ஆளாகின்றன. 1998, 2002ஆம் ஆண்டுகளில் மன்னார் வளைக்குடாவில் பவளப் பாறைகள் வெளுப்புக்கு ஆளாயின. 2005ஆம் ஆண்டிலிருந்து கோடைக் காலத்தில் மன்னார் வளைக்குடாப் பகுதியில் உள்ள பவளப் பாறைகள் வெளுப்புக்கு உள்ளாவது வாடிக்கை ஆகிவிட்டது. 2007ஆம் ஆண்டில் மண்டபம் பகுதிகளில் குறைவாகவும், கீழக்கரை, தூத்துக்குடிப் பகுதிகளில் அதிகமாகவும் பவளப் பாறைகள் வெளுப்புக்கு உள்ளாவது நடந்தது. இப்படி வெளுப்புக்கு உள்ளாகும் பவளப் பாறைகள் அடுத்த இரண்டு மாதங்களில் புத்துயிர் பெற்றுவிடும். ஆனால் சில நேரங்களில் அதன் உயிர்ப்பை மீட்க முடியாமலும் போய்விடும்" (பொன்.தனசேகரன்)

புவி வெப்பமயமாதலால் அதிகரித்து வரும் கடல் நீர் மட்ட உயர்வினால், கடலில் நீரின் ஆழம் அதிகரிக்கும். இதனால் பவளப் பாறைகளின் வளர்ச்சிக்குத் தேவையான சூரிய வெளிச்சம் குறையும். மேலும் பவளப் பாறைகளின் வளர்ச்சியும் குறையும். பவளப் பாறைகளின் இப்படியான வளர்ச்சிக் குறைவால் என்ன நேரும்? பேட்டர்சன் கூறுகிறார்.

"பவளப்பாறைகள் குறைந்தால் மன்னார் வளைக்குடாப் பகுதியின் கடலோரப் பகுதியில் அலைகளின் வேகம் அதிகரிக்கும். கடல் அரிப்பும் அதிகமாகும். பவளப் பாறைகள் அழிபடுவதால் புயல் பாதிப்புகளும் தீவிரமாகிவிடும்."

பொருளாதார ரீதியிலும் இப்பவளப் பாறைகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது. பலவகை மீன் இனங்கள் தம் இனப் பெருக்கத்துக்கு இப்பவளப் பாறைகளையே சார்ந்துள்ளன. ஒரு சதுரக் கிலோ மீட்டருக்கு நல்ல பவளப் பாறைகள் இருந்தால் மீன் பிடித்தல் உள்ளிட்டப் பல்வேறு சேவைகளின் மூலம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் டாலர் முதல் 6 இலட்சம் டாலர் வரை வருமானம் கிடைக்கும் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பான வேர்ல்ட் கன்சர்வேசன் மானிட்டரிங் சென்டர் கூறியுள்ளதாகத் தன் நூலில் பதிவு செய்துள்ளார். தமிழகத்தில் காலநில மாற்றப் பாதிப்பை ஆய்வுச் செய்துள்ள எழுத்தாளர். பொன். தனசேகரன்.

2004 ல் ஏற்பட்ட சுனாமியின் போது தமிழகக் கடற்கரை முழுவதும் அலைகளின் தாக்குதலுக்கு உள்ளானப் போது தப்பித்த ஒரே பகுதி இந்த மன்னார் வளைக்குடாப் பகுதி என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் தற்போது இங்குள்ள பவளப் பாறைகள் பாதிப்புக்கு உள்ளாகி வருவதால் இதனை நம்பி வாழும் 4000 வகை மீன்கள், 800 வகையான மற்ற பவளப்பாறைகள், இதுவரை கண்டறியப்படாத நுண்ணுயிரினங்களும் அழிய நேரிடும்.

இதுதவிரக் கடலின் முதன்மை உணவுத் தயாரிப்பாளரான மிதவை உயிரினம் (Plankton) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உயிரினமாகும். இவை மட்டுமே முப்பதிலிருந்து நாற்பது விழுக்காடு வரை கார்பன் – டை – ஆக்சைடை உட்கிரகித்துக் கொள்கின்றன. தம் ஒளிச்சேர்க்கைக்காகப் பயன்படுத்தியது போக மீதமாகும் கார்பன் – டை – ஆக்சைடை மற்ற உயிரினங்களுக்கும் பரவச் செய்கின்றன. 1998 –1999ல் 126 வகையான மிதவை உயிரினங்கள் மன்னார் வளைகுடாவில் இருந்தன. ஆனால் தற்போது வெறும் 45 வகை மட்டுமே காணப்படுகின்றன. (ENVIS center of tamil Nadu, 2015) இதனால் கார்பன் – டை – ஆக்சைடை உட்கிரகிக்கும் தன்மைக் குறைவதால் வளிமண்டலத்தில் இதன் அளவுக் கூடிப் பசுமை இல்ல வாயு வெளியீட்டைப் பெருக்குகிறது.

இந்நிலையில் கூடுதலாக இப்பகுதிக்குத் தெற்கே அமைந்துள்ள கூடங்குளம் அணு உலையாலும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனை Union of concerned scientists எனும் அமைப்பு 2011 ஆம் ஆண்டு வெளியிட்டத் தகவல் உறுதிச் செய்கிறது. இவ்வணு உலையில் இருந்து மின் உற்பத்திக்குப் பின்னர் மீண்டும் கடலினுள் செலுத்தப்படும் கழிவு வெப்ப நீர் மன்னார் வளைக்குடாப் பகுதி வரைக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக இத்தகவல் தெரிவிக்கிறது. இதனால் இக்கடற்பகுதி மட்டுமல்லாதுக் கடற்கரை நிலங்களும், அதனையொட்டிய விவசாய நிலங்களும் பாதிப்பைச் சந்திக்கிறது. இவை அனைத்தையும் குறித்து விரிவாகக் காண்போம்.

**நன்கொடை**

**மதுரை நிர்மலா-பாபு கண்ணன் இணையர்கள் காட்டாறுக்கு நன்கொடை ரூ 4000 வழங்கினர்.**

வாலாசா வல்லவன்

# திப்பு சுல்தான் இஸ்லாமிய மதவெறியனா?

1782 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது மைசூர் போரில் ஹைதர் அலி இறந்து விடவே அவருடைய மகன் திப்பு சுல்தான் போருக்கு பொறுப்பேற்று போரில் வென்று ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டான். திப்பு சுல்தானின் ஆட்சிக்குட்பட்ட ஸ்ரீரங்கப் பட்டிணத்தில் அதுவும் திப்புவின் அரண்மனைக்கு 300 அடி தொலைவில் தான் ஆதி சங்கரனால் தோற்றுவிக்கப்பட்ட சிருங்கேரி சாரதா பீடம் என் அழைக்கப்படும் சங்கர மடம் உள்ளது.

திப்பு சுல்தானும் தன் தந்தை அய்தர் அலியைப் போலவே சிருங்கேரி சங்கர மடத்தினிடம் நல்லுறவு கொண்டிருந்தார் என்று அவர் சங்கர மடத்திற்கு எழுதிய கடிதங்களிலிருந்தும், சங்கர மடத்திலிருந்து திப்புவிற்கு எழுதப்பட்ட பதில் கடிதங் களிலிருந்தும் அறிந்து கொள்ள முடிகிறது.

திப்பு 1790 முதல் 1799ல் இறக்கும் வரை சிருங்கேரி சங்கர மடத்திற்கு இருபத்தியொரு கடிதங்கள் எழுதியிருந்தார். அவை அனைத்தும் பழைய கன்னட மொழியிலானது. அக்கடிதங்கள் அனைத்தும் இன்றும் சிருங்கேரி சங்கர மடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

சங்கர மடத்திலிருந்து திப்புவிற்கு எழுதப்பட்ட பதில் கடிதங்கள் அனைத்தும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருந்தது. திப்புவிற்கு ஓரளவு சமஸ்கிருதம் தெரியும் எனினும் தன்னுடைய பார்ப்பன அமைச்சர்கள் மூலம் திப்பு அவற்றைப் படித்து அறிந்து கொண்டு சங்கர மடத்திற்குத் தேவைப்பட்டபோதெல்லாம் உதவிகளைச் செய்துள்ளார். இந்தக் கடிதங்கள் முழுவதும் மைசூர் ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திப்பு சங்கர மடத்திற்குக் கடிதம் எழுதும் போது ஒவ்வொரு முறையும் மிகுந்த மரியாதை கொடுத்து பணிவான வணக்கத்துடன், எழுதுவார். திப்பு 1790 ல் சிருங்கேரி சங்கராச்சாரிக்கு எழுதிய முதல் கடிதத்தில் ‘ஸ்ரீமத் பரமாம்ச பரிவர ஆச்சாரிய சிருங்கேரி சச்சிதானந்த சாமிகளுக்குத் திப்புவின் வணக்கங்கள்’ என்றுதான் தொடங்கியுள்ளார். தன் நாட்டு மக்களைப் பாதுகாக்க ஈசுவரனை வேண்டும்படி அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். 1791 ல் மராட்டிய தளபதி பரசுராமபாகு என்பவன் தலைமையில் சிருங்கேரி சங்கரமடம் கொள்ளை அடிக்கப்பட்டது. அப்போதே சுமார் 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் களவாடப்பட்டன. அத்தோடு நில்லாமல் சாரதா தேவியின் சிலையையும் புரட்டிப் போட்டான் அவன். அங்கிருந்த பார்ப்பனக் குருக்களையும் கொன்றான் அந்த மராட்டிய தளபதி. கார்கிலாவுக்கு ஓடி ஒளிந்து கொள்ள வேண்டிய நிலை சங்கராச்சாரிக்கு அன்று ஏற்பட்டது. கார்கிலாவிலிருந்து தமக்கு உதவும்படி திப்புவிற்குக் கடிதம் கொடுத்தனுப்பியிருந்தார் சிருங்கேரி சங்கராச்சாரி. (சிருங்கேரி சங்கர மட கடித எண்கள் 54,55, New History of marathas by sardesi G.S. Volume III P.180) அக்கடிதத்திற்கு திப்பு பதில் கடிதம் எழுதி உள்ளார் அவை வருமாறு.

புனித இடங்களை அழிப்பவர்கள் தங்களது தீய செயல்களுக்கான பலனை அனுபவிப்பார்கள். குருவுக்குத் தீமை செய்பவர்களுக்கு அழிவே உண்டாகும். சாரதா பீடம் மீண்டும் அமைய 200 ரஹாடி ரொக்கமாகவும், 200 ரஹாடி பொருட்களாகவும் 200 ரஹாடி தானியமாகவும் வழங்கியுள்ளேன். மேலும் நிதி தேவையெனில் கொடுக்கும் படி கிராம நிர்வாக அலுவலர்க்கு உத்திரவிட்டுள்ளேன் என திப்பு சிருங்கேரி சங்கராச்சாரிக்கு எழுதி உள்ளார். (திப்புவின் கடித எண் 47)



**மதத்திற்கு அரச செலவு செய்த மொத்த தொகையில் 90% இந்து கோவில்களுக்கும் 10% இசுலாமிய மசூதிகளுக்கும் மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் செலவு செய்துள்ளார்.**

**1791 ல் மராட்டிய தளபதி பரசுராமபாகு என்பவன் தலைமையில் சிருங்கேரி சங்கரமடம் கொள்ளை அடிக்கப்பட்டது. அப்போதே சுமார் 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் களவாடப்பட்டன. அத்தோடு நில்லாமல் சாரதா தேவியின் சிலையையும் புரட்டிப் போட்டான் அவன். அங்கிருந்த பார்ப்பனக் குருக்களையும் கொன்றான்**

சிருங்கேரி சங்கராச்சாரி மீண்டும் உதவி கேட்டு திப்புவிற்குக் கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தார். அதைப் பெற்றுக் கொண்ட திப்பு, சுவாமிகள் உங்கள் கடிதம் வேலூர் வெங்கட்ராம ஜோய்ஸ் மற்றும் அகோபில சாஸ்திரிகள் மூலம் கிடைத்தது. செய்தியை தெரிந்து கொண்டேன். உங்களுக்காகப் பல்லக்கு ஒன்று அனுப்பி உள்ளேன். உங்களுக்கு மேலும் நிதி உதவி அளிக்கும் படி நகர நிர்வாகத்திற்கு உத்திரவிட்டுள்ளேன் என எழுதியுள்ளார். (திப்புவின் கடித எண்48)

நரசிம்ம சாஸ்திரி மூலம் சங்கர மடத்திலிருந்து திப்புவிற்கு மீண்டும் கடிதம் கொடுத்தனுப்பப்பட்டது. அக்கடிதத்தை பெற்றுக் கொண்ட திப்பு, 200 ரஹாடி நெல் மற்றும் சாரதா தேவிக்கு அணிவிக்க விலையுயர்ந்த பட்டு புடவையையும் மேலாடையையும், சங்கராச்சாரியின் சொந்த பயன்பாட்டிற்கு விலையுயர்ந்த இரண்டு சால்வைகளையும் அசாப் என்பவர் மூலம் அனுப்பி வைத்துள்ளார். (திப்புவின் கடித எண் 49) சிருங்கேரி சங்கராச்சாரி மீண்டும் உதவி கேட்டுத் திப்புவிற்குக் கடிதம் எழுதி உள்ளார். அக்கடிதத்தை பெற்றுக் கொண்ட திப்பு, நாராயணன் என்பவர் மூலம் யானை ஒன்றையும் புதிதாக வெளியிட்ட நாணயங்கள் பலவற்றையும் கொடுத்தனுப்பி உள்ளார். அவை வருமாறு:

| நாணயத்தின் பெயர் | எண்ணிக்கை மதிப்பு | ரூபாயில் |
|---|---|---|
| 1. ஹைதர் மகாரி | 50 | 100 |
| 2. அபிடி | 100 | 50 |
| 3. பாகபி | 200 | 500 |
| 4. பாகேநலுக்கு | .... | 700 |
| 5. பொடைக்கி நாசி அகமதி | 5 | 80 |
| 6. சிக்கர் | 10 | 80 |
| 7. பீமாரி | 10 | 40 |
| 8. குடபாகே | 3 | 300 |

இதனுடன் கூடுதலாக ரூ.500 சேர்த்து அனுப்பி வைத்தார். அன்னை சாரதா தேவியின் கோவிலை விரைவில் கட்டி முடித்துக் குடமுழுக்கு நடத்த வேண்டிக் கொண்டார். (திப்புவின் கடித எண் 50) அதே கடிதத்தில் திப்பு மேலும் எழுதி உள்ளதாவது: 1000 பார்ப்பனர்களை அழைத்து 40 நாட்களுக்கு சாஸ்திரா சண்டி ஜபம் செய்ய வேண்டிக் கொண்டார். இதற்கான முழு செலவையும் தாமே ஏற்றுக் கொள்வதாக எழுதியுள்ளார். நாட்டின் எதிரிகளை அழிக்க இந்த ஜபம் பயன்படுமென திப்பு சங்கராச்சாரிக்கு எழுதி உள்ளார். கடித எண்கள் 51, 52, 53 ஆகியவற்றிலும் சாஸ்திரா சண்டி ஜபம் நல்ல முறையில் நடத்துவது குறித்த ஏற்பாடுகளைப் பற்றியே எழுதி உள்ளார்.

கடித எண் 54 இல் சாரதா தேவிக்கு மூன்று கால பூசையும் தவறாமல் நடத்தும்படி வேண்டிக் கொண்டுள்ளார். இந்தக் கடிதம் எழுதிய போதும் சங்கராச்சாரி பயணம் செய்ய வேலைபாடுகள் மிகுந்த பல்லக்கு ஒன்றை அனுப்பி உள்ளார். சிருங்கேரி சங்கராச்சாரியின் வேண்டுகோளுக்கிணங்கி அரசுப் பணத்தைக் கையாடல் செய்து சிறையில் அடைத்து வைத்திருந்த இரண்டு பார்ப்பனர்களை விடுதலைச் செய்தார். மேலும்,திப்புவின் ஆட்சியில் நாற்பத்து அய்ந்து ஆயிரம் முதல் அய்ம்பதாயிரம் வரை மிகப்பெரிய எண்ணிக்கையிலான பார்ப்பனர்கள் அரசாங்க வேலைகளில் இருந்தனர். இவர்கள் தவறு செய்தால் தண்டிக்கும் பொறுப்பு அரசிடமிருந்ததை மாற்றி சங்கர மடத்தினிடமே அப்பொறுப்பையும் ஒப்படைத்தார். இந்து சாஸ்திரத்தில் என்ன தண்டனை விதிக்கப்பட்டுள்ளதோ அதே தண்டனையை நீங்களே ஒரு அலுவலரை அமர்த்தி நிறைவேற்றும்படி சங்கராச்சாரியை திப்பு கேட்டுக் கொண்டார். (திப்புவின் கடித எண் 58) மேலே கண்ட கடிதத்திலேயே சங்காராச்சாரிக்கு வெள்ளைக் குதிரை ஒன்று அனுப்பி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**திப்புவின் ஆட்சியில் நாற்பத்து அய்ந்து ஆயிரம் முதல் அய்ம்பதாயிரம் வரை மிகப்பெரிய எண்ணிக்கையிலான பார்ப்பனர்கள் அரசாங்க வேலைகளில் இருந்தனர். இவர்கள் தவறு செய்தால் தண்டிக்கும் பொறுப்பு அரசிடமிருந்ததை மாற்றி சங்கர மடத்தினிடமே அப்பொறுப்பையும் ஒப்படைத்தார்.**

சிருங்கேரி மடத்தின் சாரதா தேவி கோவிலின் திருவிழாவிற்காக திப்பு தங்கத் தகட்டாலும், வெள்ளிக் குமிழ்களாலும் செய்யப்பட்ட பல்லக்கு ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார் என்பதை அவருடைய கடிதம் வாயிலாக அறிய முடிகிறது. (திப்புவின் கடித எண் 59)

திப்பு சிருங்கேரி சங்கர மடத்திற்கு ஸ்பதிகலிங்கம் ஒன்றை விலையுயர்ந்த கற்களால் செய்து கொடுத்துள்ளார். (Tippu Sultan a Fanatic P. 84) மேலே கண்ட ஆவணங்களின் மூலம் திப்புவிற்கும் சிருங்கேரி மடத்திற்கும் இருந்த நல்லுறவை அறிந்து கொள்ள முடிகிறது. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாலமாக இருந்து நேர்மையாக ஆட்சி செய்துள்ளார். மதத்திற்கு அரச செலவு செய்த மொத்த தொகையில் 90% இந்து கோவில்களுக்கும் 10% இசுலாமிய மசூதிகளுக்கும் மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் செலவு செய்துள்ளார். திப்புவிற்கும் சிருங்கேரி சங்கர மடத்திற்கும் இருந்த தொடர்புகளை மட்டுமே இங்குச் சுருக்கமாக எழுதி உள்ளேன். திப்புவின் மற்ற பண்புகளும் மிகச்சிறந்தவை. குறிப்பாக உழவர்களுக்கே நிலம் சொந்தம் என்பதை நடைமுறைபடுத்தியவர். எல்லா மதத்தினரையும் சமமாக நடத்திய பண்பாளர். மிகச் சிறந்த கல்வி மான். அவர் மறைந்தது 4-5-1799 இல்! அவர் மறைந்த இருநூறாவது ஆண்டில் அவரை நினைவு கூர்வோம். வாழ்க திப்புவின் புகழ்!

குறிப்பு: இக்கட்டுரை எழுத பயன்பட்ட நூல்கள்:

1. Tippu Sultan a Fanatic? by V. JALAJA SAKTHI - DASAN.
2. Sringeri Sovemir 1968.
3. The Sword of Tippu Sultan by. BHAGWANGI DWANI
4. History of Sringeri by A.K.SASTRY
5. Secret Correspondence of Tippu Sultan by. KABIR KAUSAR
6. திப்பு விடுதலைப் போரின் முன்னோடி

தொகுப்பு Dr. வெ.ஜீவானந்தம்

அதி அசுரன்

# வேட்டி, சேலை: இந்து - இந்திய அடையாளம்

சர்வதேச வேட்டி தினம் ஜனவரி 6 என்ற அறிவிப்பைக் கண்டு தமிழர்கள் உற்சாகம் அடைந்தார்களோ இல்லையோ, இந்திய தேசிய முதலாளிகளாக வளரத்துடிக்கும் தமிழ்நாட்டு வேட்டி வியாபாரிகளும், வேட்டிக் காவலர்களும் உற்சாகம் அடைந்தார்கள். இப்படி ஒரு அதிகாரப்பூர்வ அறிவிப்பை ஐக்கிய நாடுகள் அவையின் இணையதளத்திலோ, யுனெஸ்கோவின் இணைய தளத்தில் காணமுடியவில்லை. அப்படி எந்தத் தகவலும் இல்லை. ஆனால் வேட்டி வியாபாரிகளும், காவலர்களும் இதை ஊதிப் பெரிதாக்குகிறார்கள். அகில இந்திய மார்க்கெட்டைக் குறிவைத்து இந்த அறிவிப்புகள் வந்திருக்கலாம்.

ஐரோப்பாவில் இருக்கும் ஒரு ஆலைமுதலாளிக்கு இருக்கும் அரசியல் பின்புலம், திருப்பூரில் இருக்கும் ராம்ராஜ், ஈரோட்டில் இயங்கும் ஆலயா, எம்.சி.ஆர் வேட்டி நிறுவன அதிபர்களுக்கு இருக்காது என்பதும் நமக்குத் தெரியும். ஆனால், வேட்டிக்கும் சேலைக்கும் இருக்கும் மதப்பாதுகாப்பு, மதபலம் இந்தியாவில் வேறு ஆடைகளுக்கு இல்லை. இந்த இந்துமத பலத்தைப் புரிந்துகொண்ட அனைவரும் வேட்டி. சேலை வணிகத்தில் கொடிகட்டிப் பறக்கின்றனர். தமிழர்களின் ஆடைதானே வேட்டியும் சேலையும்? இதிலென்ன அகில இந்திய மார்க்கெட்? இதற்கு எப்படி இந்து மதபலம்? என்ற கேள்விகள் உங்களுக்கு எழவேண்டும்.

அகமதாபாத்திலும், சூரத்திலும் ஆயிரக்கணக்கான சேலை, வேட்டி உற்பத்தி ஆலைகள் வெற்றிகரமாக இயங்குகின்றன. பா.ஜ.க மோடியின் வெற்றியில் அந்த ஆலை அதிபர்களான பாட்டீல்கள் மிகமுக்கியப் பங்கு வகிக்கிறார்கள். அந்த ஆயிரக்கணக்கான வேட்டி, சேலை உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் மட்டுமா விற்பனை ஆகிறது? ஒரே ஒரு தமிழ்நாட்டுச் சந்தைக்காக மட்டுமா குஜராத்திகள் ஆயிரக்கணக்கான ஆலைகளை நடத்துகிறார்கள்? உறுதியாக இல்லை.

**வேட்டி, சேலையின் இந்து மதப் பின்னணி**

வேட்டியும் சேலையும் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் அணியப்படும் ஆடைகளாகும். அப்படியானால் தமிழர்களின் ஆடைப் பண்பாட்டை ஒட்டு மொத்த இந்தியாவும் ஏற்றுக்கொண்டுள்ளதா? அதுவும் இல்லை. இதோ, இந்து மதத்தின் தலைவன் மறைந்த சங்கராச்சாரி சந்திரசேகரேந்திரர் தனது தெய்வத்தின் குர ல் இரண்டாம் பாகத்தில்,

> “இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்றால் சில அடையாளங்கள் உண்டு. வேஷ்டி, சேலை, நெற்றிப்பொட்டு இவையெல்லாம் தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன” எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஆம் வேட்டி சேலை என்பது இந்துக்களின் தர்மசாஸ்திரங்கள் வலியுறுத்தும் ஆடைகள். அதனால்தான் இந்த ஆடைகள் இந்தியாவாக இருந்த நாடுகள் மற்றும் இந்துமதம் உயிரோடு இருக்கும் நாடுகள் அனைத்திலும் இந்துக்களின் அடையாளமாகவும், இந்தியாவின் அடையாளமாகவும் இன்றும் இருக்கின்றன.

ஆர்.எஸ்.எஸ் இயக்கம் தமிழ்நாட்டில் நடத்தும் முக்கியக் கல்லூரி மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள விவேகானந்தர் கலைக்கல்லூரி. இந்தக் கல்லூரியில் மாணவர்கள் வேட்டி மட்டுமே அணிய வேண்டும். எந்தச் சூழலிலும் பேண்ட் போன்ற வேறு எந்த உடையையும் அணியக்கூடாது. ஆர்.எஸ்.எஸ் நடத்தும் அனைத்துக் கல்லூரிகளிலும் ஜீன்ஸ், டிசர்ட் களுக்கு அனுமதி கிடையாது.




இந்தியாவைப் பொறுத்தவரை ஒரு வணிகமோ, அரசியல் இயக்கமோ வளர வேண்டுமென்றால் அந்த வணிகம் இந்துமத அடிப்படைவாதிகளோடு நெருங்க வேண்டும். அந்த அரசியல் கட்சி பார்ப்பன அதிகார மய்யங்களோடு அனுசரித்துப் போகவேண்டும். இது அடிப்படை அடிமை விதி. அதைப் புரிந்து கொண்டது இந்நிறுவனம்.




## இந்துக்களின் புனித ஆடை

ஒரு ஆணோ, பெண்ணோ, கணினி மென்பொருள் துறையில் வெளிநாட்டில் பணியாற்றுபவராக இருக்கட்டும், அறிவியலில் ஆராய்ச்சியில் பட்டங்களைப் பெற்ற மிகப் பெரும் ஆராய்ச்சியாளராக இருக்கட்டும், அணுவைப் பிளந்து ஆராய்ச்சி, மரபணுக்களையே மாற்றும் படிப்பு, பணி என எவ்வளவு சிறந்த பணிநிலையில் இருப்பவர்களும் - அந்தப் பணியிடங்களில் இருக்கும் போது ஜீன்ஸ், ட்ராக் சூட், லோயர், லெகின்ஸ், ஸ்லீவ்லெஸ், என எல்லா நவீனமுறை ஆடைகளையும் அணிந்தவராக இருந்தாலும் அவர்களது திருமணம் என்று வரும்போது இந்து மதத்தை அப்படியே உள்வாங்கி - பட்டுச்சேலை, பட்டு வேட்டியில் தான் காட்சி தருகின்றனர்.

இக்காட்சி தமிழ்நாட்டுத் தமிழர்களின் திருமணங்களில் மட்டுமல்ல; வடக்கே காஷ்மீர் பண்டிட்டுகளின் திருமணத்திலும், கிழக்கே வங்காளப் பார்ப்பனர்கள் மற்றும் வங்காளிகள் திருமணத்திலும், மேற்கே குஜராத்திகளின் திருமணத்திலும், மராட்டிய சித்பவன் பார்ப்பனர்கள் மற்றும் மராட்டியர்களின் திருமணத்திலும், உத்திரப்பிரதேச, பீகார், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் மிஸ்ரா, சர்மா, தீட்சித், முகர்ஜி என அனைத்துப் பார்ப்பனர்கள் மற்றும் அனைத்து தேசியஇனங்களில் உள்ள இந்துக்களின் திருமணங்களிலும் வேட்டி, சேலைகளே புனிதமான ஆடைகளாகக் காட்சிதருகின்றன. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் உள்ள சராசரி இந்து மக்களின் பாரம்பரிய ஆடையாகவும் வேட்டி, சேலைகளே இருக்கின்றன.

ஒவ்வொரு மாநிலத்திலும் வேட்டிக்கு ஒவ்வொரு பெயர். தமிழ்நாட்டில் வேட்டி, ஆந்திரா, கர்நாடகாவில் பஞ்சே, கேரளாவில் முண்டு, இந்தி பேசும் வடஇந்திய மாநிலங்களில் தோட்டி, பஞ்சாபில் லாச்சா, வங்காளத்தில் தட்டி, மராட்டியத்தில் தோட்டர் இப்படி பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. அதை உடுத்தும் முறையும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு முறை பின்பற்றப்படுகிறது. சேலையும் இதே போல ஒவ்வொரு மொழிக்கேற்ப பெயர்கள் மாறுபடுகின்றன. உடுத்தும் முறை மாறுகிறது. ஆனால் இந்தியா முழுவதும் அடிப்படை ஆடை வேட்டியும், வேலையும் தான்.

இந்த ஒட்டுமொத்த இந்தியாவையும் ஒருங்கிணைப்பது இந்து மதம் தான் என்பதில் வரலாறு அறிந்தவர்களுக்கு மாற்றுக்கருத்து இருக்காது. அந்த இந்து மதத்தின் அடையாளமாகத்தான் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் வாழும் அனைத்து தேசிய இனங்களைச் சேர்ந்த இந்துக்களும் இந்த ஆடைகளை அணிகின்றனர். இந்தியாவில் உள்ள இஸ்லாமியர்களோ, கிறிஸ்தவர்களோ வேட்டி, சேலைகளைப் புனித ஆடைகளாகக் கருதுவதில்லை. குறிப்பாக இஸ்லாமியர்கள் பட்டினால் செய்யப்பட்ட ஆடைகளைக் குற்றமாகக் கருதுகிறார்கள். இந்துக்களுக்கோ பட்டு வேட்டியும், பட்டுச்சேலையும் தான் புனித ஆடை.

இந்தியாவின் பலமாநிலங்களுக்கும் பயணம் செய்பவர்கள், பல்வேறு மாநிலங்களிலும் வாழும் அடித்தட்டு, உழைக்கும் மக்களோடு பழகியவர்கள் இந்தியா முழுவதிலும் வேட்டி, சேலைகள் புனிதமாகக் கருதப்படுவதை நேரடியாகக் கண்டிருப்பார்கள். இந்தியா முழுவதும் சுற்றிவர வாய்ப்பில்லாதவர்கள் இணையதளங்களிலேயே சான்றுகளை எளிதாகத் தேடி எடுத்துவிடலாம். உண்மை நிலை இப்படி இருக்க இந்த வேட்டி, சேலைகளைத் தமிழர்களின் அடையாளம் என்று எப்படிச் சொல்ல முடியும்?



## வெளி நாடுகளில் இந்திய - இந்து அடையாளமாக வேட்டி, சேலை

உலகின் ஒரே இந்துநாடு என்ற நிலையில் இருந்த நாடு நேபாளம் ஆகும். அங்கு வாழும் இந்தியர்களான மாதேசிகள் ஆடை வேட்டி, சேலை தான். நேபாளத்தில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, மதச்சார்பற்ற நாடாக அறிவிக்கப்பட்ட பிறகு அங்கு வாழும் இந்தியர்களான மாதேசிகள், தானுஸ், தாரஸ் இனத்தவர்கள் தங்களது உரிமைகளுக்காகப் பல போராட்டங்களை நடத்தினர். அவற்றில் நாம் அறிந்துகொள்ள வேண்டிய போராட்டம் ஒன்று உள்ளது. அது 'மாதேசிகளின் வேட்டிப் பேரணி'. கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 4 ஆம் நாள் நேபாளத்தில் ஜானகப்பூரில் இந்த வேட்டிப் பேரணி நடைபெற்றது. இந்தியர்களின் உரிமைக்காக இந்தியப் பாரம்பரிய ஆடை அணிந்து போராட்டம் என்பது தான் நாம் கவனிக்கத்தக்கது.



**கோடிக்கணக்கான தமிழர்களின் கடவுளான முருகனே பழனியில் கோவணத்துடன்தான் காட்சியளிக்கிறார். பிறகு 'வேட்டி' எப்படி தமிழர்களின் ஆடையாகும். நியாயமாகக் கோவணம்தானே தமிழர்களின் ஆடையாக இருக்க முடியும்?**

அதேபோல இந்தோனேசியாவில் உள்ள முக்கியத்தீவு பாலித்தீவு ஆகும். இந்த பாலித் தீவில் வாழ்பவர்களில் 93 சதவீதம் இந்துக்களாவார்கள். அங்கும், இன்னும் பிராமணன், சூத்திரன் என்ற வர்ணாசிரம தர்மங்களைப் பின்பற்றி வாழ்கிறார்கள். கோவில் அர்ச்சகர்களாக இன்றும் பார்ப்பனர்கள்தான் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இஸ்லாமிய நாடான இந்தோனேசியாவில் உள்ள பாலி இந்துக் கோவில்களில் அரபு உடையையோ, இஸ்லாமிய உடையையோ அணிந்து உள்ளே நுழைய முடியாது. அங்கு இந்துக்களின் பாராம்பரிய உடையான வேட்டியும், சேலையும் அணிந்து சென்றால் மட்டுமே கோவிலில் நுழைய முடியும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளாக இருந்தாலும் அவர்கள் வேட்டி அணியாவிட்டால் அனுமதி கிடையாது. அதுபோன்ற பாலிக் கோவில்களின் விதிமுறைகள் தெரியாமல் அங்கு செல்லும் வெளிநாட்டுப் பயணிகளுக்காக கோவிலின் வாசலிலேயே வேட்டிகள் வழங்கப்படுகின்றன. கோவில் நிர்வாகமே வேட்டியை வழங்குகின்றது. கோவிலுக்குள் சென்று வழிபட்டுவிட்டு மீண்டும் கோவில் நிர்வாகத்திடம் வேட்டியைக் கொடுத்துவிட வேண்டும்.

மற்றொரு இஸ்லாமிய நாடான பங்களாதேசிலும் அங்கு வாழும் இந்துக்களின் திருமணங்களில் அணியப்படும்

பாரம்பரிய ஆடை இந்த வேட்டி, சேலைதான். ஈழத்திலும், யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் கந்தசாமி கோவிலில் இன்றுவரை ஆண்கள் வேட்டி அணிந்தால் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். இப்படி வெளிநாடுகளிலும் இந்துக்களின் அடையாளமாகவும், இந்தியாவின் அடையாளமாகவும் இருப்பவைதான் வேட்டி, சேலைகள். தமிழர்களின் அடையாளமாக அல்ல!

**கோவில் விழாக்களில் கண்ணியம் காக்கப்பட வேண்டும் என நேர்மையாக எண்ணியிருந்தாலோ இந்த ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கான தடையை உறுதிப்படுத்தியிருப்பார். ஆனால் அவர் காப்பாற்றத் துடித்தது கோவிலின் கண்ணியத்தை அல்ல; இந்துக்களின் பாரம்பரிய அடையாளத்தை!**

### சென்னை கிரிக்கெட் க்ளப்பில் கைலிக்குத்தான் தடை; வேட்டிக்கு அல்ல

கடந்த 2014 ஆம் ஆண்டு சென்னை கிரிக்கெட் க்ளப்பில் நீதிபதி அரிபரந்தாமன் மற்றும் மூத்த வழக்கறிஞர் காந்தி ஆகியோர் வேட்டி கட்டிச் சென்றதற்காக க்ளப்பில் அனுமதிக்கப்படவில்லை. அதற்குக் கடும் எதிர்ப்புகள் கிளம்பின. ஆனால் அந்த கிரிக்கெட் க்ளப்பின் விதிகளில் வேட்டி தடை செய்யப்பட்ட ஆடை என்று குறிப்பிடப்பட வில்லை. கைலி, பெர்முடாஸ் போன்ற ஆடைகளே க்ளப் விதிகளின்படி தடைசெய்யப் பட்டிருக்கின்றன. அதைத் தவறாகப் பயன்படுத்திய சில நிர்வாகிகளால் இச்சம்பவம் பெரிதானது.

இதற்காக அனைத்துக் கட்சிகளும், இயக்கங்களும் களத்தில் இறங்கின. அறிக்கைகள் அனல் பறந்தன. 06.08.2014 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையிலேயே தமிழக முதல்வரே ஒரு அறிவிப்பை வெளியிட்டார். “அந்த கிரிக்கெட் க்ளப்பின் பதிவுவிதிகளின்படி வேட்டி தடைசெய்யப்படவில்லை. கைலி தான் தடை செய்யப் பட்டுள்ளது” என்று அறிவித்தார். கைலி அடித்தட்டு மக்களின் உடை, கோடிக்கணக்கான தமிழ்நாட்டு ஆண்களின் உடை. பெர்முடாஸ் இலட்சக்கணக்கான இளைஞர்களின் உடை. ஆனால், கைலி இஸ்லாமியரின் பண்பாடாகப் பார்க்கப்படுகிறது. வேட்டி இந்துவின் அடையாளமாக இருக்கிறது. அதனால் அவற்றுக்காக எந்தத் தலைவனும், எந்தத் தலைமையும் அறிக்கைகூட விடவில்லை. வேட்டிக்காக தமிழ்நாடு சட்டமன்றமே அலறியது.

### தமிழ்நாட்டுக் கோவில்களில் ஆடைக் கட்டுப்பாடு உயர்நீதிமன்ற உத்தரவு

வையம்பட்டி அருகே ஒரு கிராமத்தின் கோவில் திருவிழாவில் ஆடல், பாடல் நிகழ்ச்சி நடத்துவதற்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து மதுரை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்குத் தொடுக்கப்பட்டது. அதில் தீர்ப்புக்கூறிய நீதிபதி. முதலில் ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கிவிட்டார். பிறகு தேவையே இல்லாமல் யாருமே எழுப்பாத ஒரு பிரச்சனைக்குத் தீர்வையே கொடுத்தார். அதுதான் 2016 ஜனவரி 1 முதல் இந்துக் கோவில்களில் ஆடைக்கட்டுப்பாடு.

ஆடல், பாடல் என்ற நிகழ்ச்சி முழுக்க முழுக்க ஆண்கள் மட்டுமே ரசிக்கும் நிகழ்ச்சி. மைனர்களுக்கான நிகழ்ச்சி. அரைகுறையாகப் பெண்களின் உறுப்புகளைப் பார்க்க வேண்டும்; ஆபாச நெளிவுகளை இரசிக்க வேண்டும் என்று மனநோயாளிகளாகத் திரிபவர்களின் ஆசைகளை நிறைவேற்றும் நிகழ்ச்சி.

கோவில்களில் கண்ணியமான உடை அணிந்துவர வேண்டும் என்று கூறியுள்ளார் நீதிபதி. இவர் அனுமதி அளித்த ஆடல், பாடல் நிகழ்ச்சியை அதே நீதிபதி அவரது குடும்பத்தினருடன் அமர்ந்து பார்க்கத் தயாரா? ஒருமுறையாவது பார்த்திருந்தாலோ அல்லது அவற்றை நடத்தும் கிராமத்து மக்களோடு பழகியிருந்தாலோ அல்லது கோவில் விழாக்களில் கண்ணியம் காக்கப்பட வேண்டும் என நேர்மையாக எண்ணியிருந்தாலோ இந்த ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கான தடையை உறுதிப்படுத்தியிருப்பார். ஆனால் அவர் காப்பாற்றத் துடித்தது கோவிலின் கண்ணியத்தை அல்ல; இந்துக்களின் பாரம்பரிய அடையாளத்தை! இந்தியாவின் அடையாளத்தை!

இந்தோனேசியாவிலும், நேபாளத்திலும், பங்களா தேசிலும் வாழும் இந்துக்களால் கடைபிடிக்கப்படும் இந்துப் பாரம்பரியம் தமிழ்நாட்டில் நடைமுறையில் இல்லாவிட்டால் உச்சிக்குடுமி மன்றம் வேடிக்கை பார்க்குமா? எனவேதான் எவரும் கேட்காத கேள்விக்குத் தானே விடையளித்து வேட்டி, சேலைக்காக உத்தரவிட்டுள்ளது.

இதேபோல ஆந்திராவில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் கடந்த 2013 லேயே தனது கோவிலுக்குள் வேட்டி, சேலைகளுக்கு மட்டுமே அனுமதி என்று முடிவெடுத்துவிட்டது. அதை நிறைவேற்ற தேவஸ்தானக் குழுவில் சில நடைமுறைச் சிக்கல்கள். எனவே இன்னும் முழுமையாக நிறைவேற்றவில்லை. விரைவில் அங்கும் வேட்டி, சேலைகளுக்கே அனுமதி என்ற நிலை வரப்போகிறது.

வேட்டி, சேலை என்பது இந்து - இந்தியாவின் பாரம்பரியம் என்பது பார்ப்பனர்களுக்குத் தெரியும். இந்தியா முழுவதும் தொடர்பு வைத்திருப்பவர்கள் அவர்கள்தான். நாம் தான் அதைத் தமிழர்களின் அடையாளம் என்று தவறாகப் புரிந்து கொண்டுள்ளோம்.

### தமிழ்த்தேசியர்களின் வேட்டி, சேலை மயக்கம்

தமிழர்களின் பண்பாட்டில் முக்கிய இடம் வகிப்பவர் முருகன் எனவும் அவர் ஒரு தமிழ்நாட்டு மன்னன் எனவும் பல தமிழ்த்தேசியர்கள் பேசி வருகிறார்கள். முருக பக்தர்களின் முக்கிய விழாவான தைப்பூசம் தமிழர்களின் பண்பாட்டு விழா. அதற்குத் தமிழ்நாடு முழுவதும் அரசு விடுமுறை அளிக்க வேண்டுமென தோழர் சீமான் அறிவித்துள்ளார். அரசியல்....நடக்கட்டும். நாம் கேட்க விரும்புவது, சீமானிடம் மட்டுமல்ல; அனைத்து வேட்டி மயக்கத்துக்காரர்களிடமும் கேட்கிறோம்.

கோடிக்கணக்கான தமிழர்களின் கடவுளான முருகனே பழனியில் கோவணத்துடன் தான் காட்சியளிக்கிறார். பிறகு வேட்டி எப்படி தமிழர்களின் ஆடையாகும். நியாயமாகக் கோவணம்தானே தமிழர்களின் ஆடையாக இருக்க முடியும்? பழனி முருகன் ஆடையாவது ‘கோவணம்’ என்ற அளவிலாவது இருக்கிறது. ஆதித்தமிழர்கள் - சங்க காலத் தமிழர்கள் இலை, தழைகளையும், மலர்களையும் தான்

ஆடைகளாக அணிந்து வாழ்ந்தார்கள் என சங்க இலக்கியங்களான குறிஞ்சிப்பாட்டும், நற்றிணையும் (பாடல் எண் 204, 390) தெளிவாக விளக்குகின்றன.

அப்படியானால் தமிழர்களின் பாரம்பரியத்தை மீட்கப் போராடுபவர்கள் நியாயமாக எந்த ஆடைக்காகப் போராடவேண்டும்? கோவணத்தை மீட்கப் போராட வேண்டும். இலை, தழைகளை, மலர்களை ஆடையாக அணியத் தொடங்க வேண்டும்.

குறிஞ்சிப்பாட்டு, நற்றிணை காலத்துக்கு முந்தைய தமிழன் நிச்சயமாக நிர்வாணமாகத்தான் வாழ்ந்திருப்பான். தமிழன் மட்டுமல்ல; உலகில் உள்ள அனைத்து இனங்களும் அவ்வாறு நிர்வாணக் கோலத்திலிருந்து படிப்படியாக, இலை தழைகள் - கோவணம் - வேட்டி போன்ற உடைகள் - தையல் ஊசியும், நூலும் வந்தபிறகு தைக்கப்பட்ட ஆடைகள் - தையல் இயந்திரம் வந்தபிறகு இன்றைய நவீன ஆடைகள் - பின்னலாடைகள் என்று தான் முன்னேறியிருக்க முடியும்.

இந்த ஆடைப் பரிணாம வளர்ச்சியில் பல்வேறு நிலைகளைக் கடந்து வந்திருப்போம். இவற்றில் ஏதோ ஒரு நிலையைப் பிடித்துக்கொண்டு அதுதான் எமது பாராம்பரியம், எமது அடையாளம் என்று கூறுவது உலக அறிவு அற்றவர்களின் செயல் அல்லது ஏதோ ஒரு சுயநலப் பின்னணி உள்ளது என்று பொருள்.

**தேசிய இன அடையாள வியாபாரம்**

வணிகர்களின் வியாபார வெறியே, வேட்டைச் சிந்தனையே 'தேசிய இனம்' என்ற ஒரு கருத்தாக்கத்தை உருவாக்கியது என்பதைச் சில தேசிய இனங்களின் போராட்டங்களை வைத்துப் புரிந்துகொள்ள முடியும். இன்னும் சில நாடுகளில் 'தேசியஇனம்' என்ற கருத்தாக்கத்தைப் பெரு வணிகர்கள் தமது வணிகத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதையும் பார்க்கலாம். இந்த வேட்டிப்பாரம்பரிய மீட்பு, சர்வதேச வேட்டி தினம் ஆகியவற்றிலிருந்து அவற்றைத் தெளிவாகக் காணலாம்.

திருப்பூர் ராம்ராஜ் வேட்டிகளின் மிகப்பெரிய அளவிலான விற்பனை மய்யங்கள் பெங்களூரிலும், ஹைதராபாத்திலும், கேரளாவில் சில மாவட்டங்களிலும் வெற்றிகரமாகச் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் வசிக்கும் கன்னட நடிகர் அர்ஜூன் ராம்ராஜ் நிறுவனத்தின் கர்நாடக விளம்பரத் தூதுவராக உள்ளார். நடிகர் ஜெயராம் கேரளாவில் விளம்பரத் தூதுவர். இந்த நிறுவனத்தினர், கர்நாடகாவில் 'தமிழர்களின் பாரம்பரியம் வேட்டி' என்று சொல்லியா விளம்பரம் செய்வார்கள்? நிச்சயம் முடியாது. 'கன்னடர்களின் பாரம்பரியம்' என்று சொல்லித்தான் விளம்பரம் நடக்கிறது. அதுபோல ஆந்திரா, கேரளாவிலும் அந்தந்த தேசிய இனத்தின் பாரம்பரியம் என்றுதான் விளம்பரப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் உலக வேட்டி தினத்தைப் பெரும் பொருட்செலவில் விளம்பரம் செய்து வருகிறார்கள். 'வெற்றித்தமிழர் பேரவை' என்ற பெயரில் ஒரு அமைப்பையும் இயக்கி வருகிறார்கள். அதேசமயம் மிகப்பெரும் சந்தையான வட மாநில மார்க்கெட்டைக் குறிவைத்து - அகில இந்திய அளவில் பிரபலமாக உள்ள தமிழ்நாட்டுப் பார்ப்பனரான கிரிக்கெட் வீரர் அஸ்வின் இரவிச்சந்திரனைத் தனது ப்ராண்ட் அம்பாசிடராக அறிவித்துள்ளார்கள்.

துணிகளை வாங்க வைப்பதற்கு தேசியஇனம், பாரம்பரியம், வேட்டிதினம் என கவர்ச்சி விளம்பரங்கள் வெளியிடும் அதேநேரத்தில் இந்திய தேசிய முதலாளியாக மாற வேண்டுமானால் இந்து மத ஆதிக்கவாதிகளுடன் அனுசரித்துப் போக வேண்டுமல்லவா? இந்த நிறுவனத்தின் தலைவர் தான் பொள்ளாச்சி அறிவுத்திருக்கோவிலின் அறங்காவலர்.

**ஃபேண்ட், பெர்முடாஸ், கைலி, லெகின்ஸ், ஜீன்ஸ், டிசர்ட் அணிவதை வசதியாகவும், வழக்கமாகவும் கொண்டிருக்கும் பல பெரியார் இயக்கத் தோழர்கள், பொதுவுடைமைத் தோழர்கள், தலித் இயக்கத் தோழர்கள் தங்களது திருமணம், பொங்கல், இல்லத்தின் முக்கிய விழா நாட்களில் வேட்டி, சேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை அணிந்து வருவது, சமுதாயத்தின் வளர்ச்சி நோக்கிய மாற்றத்துக்கு எதிரான செயலாகும்.**

வேதாத்ரி மகரிஷியின் உலக சமுதாய சேவா சங்கத்தின் அகில உலகத் துணைத்தலைவர். இந்தியாவில் 22 பல்கலைக் கழகங்களில் யோகாவை ஒரு பாடமாக மாற்றிய அமைப்பு இது.

இந்தியாவைப் பொறுத்தவரை ஒரு வணிகமோ, அரசியல் இயக்கமோ வளரவேண்டுமென்றால் அந்த வணிகம் இந்துமத அடிப்படைவாதிகளோடு நெருங்க வேண்டும். அந்த அரசியல் கட்சி பார்ப்பன அதிகார மய்யங்களோடு அனுசரித்துப் போகவேண்டும். இது அடிப்படை அடிமை விதி. அதைப் புரிந்துகொண்டது இந்நிறுவனம்.

மேலும், கோவில்களில் ஆடைக்கட்டுப்பாடு என மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அடுத்த சில நாட்களில் 'வேட்டி அணிந்து கோவிலுக்குச் செல்லும் கலாச்சாரத்தைச் செயலாக்கிய இந்து அறநிலையத் துறைக்குப் பாராட்டு' என்று பல இலட்சம் செலவழித்து விளம்பரம் வெளிவருகிறது.

2014 ல் கிரிக்கெட் க்ளப்பில் வேட்டிக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. தமிழர்களின் பாரம்பரிய உடைக்குத் தடையா? என தமிழகக் கட்சிகள் கொந்தளிக்கின்றன. தமிழக அரசு வேட்டிக்கு அனுமதி வழங்குகிறது. அடுத்த சில நாட்களில், எம்.சி.ஆர் என்ற வேட்டி தயாரிப்பு நிறுவனம் மிகப்பெரும் பொருட்செலவில் தொலைக்காட்சி விளம்பரங்களை வெளியிடுகிறது. இந்த எம்.சி.ஆர் நிறுவனம் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த மலையாளிகளால் நடத்தப்படும் நிறுவனம் ஆகும்.

இது ஏதோ ஒரிரு நிறுவனங்களைப் பற்றிய தகவல்கள் அல்ல. அகில இந்திய அளவில் வெற்றிபெற எண்ணும் எந்தத் தொழிலதிபராக இருந்தாலும் இந்த அணுகுமுறைகளைக் கடைபிடித்துத்தான் ஆகவேண்டும். அது பொள்ளாச்சி மகாலிங்கமாக இருந்தாலும் சரி, முருகப்பா குழுமமாக இருந்தாலும் சரி. இதுதான் நடைமுறை.





**வங்காளம், குஜராத், உத்திரப்பிரதேச, பீகார், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் மிஸ்ரா, சர்மா, தீட்சித், முகர்ஜி என அனைத்துப் பார்ப்பனர்கள் மற்றும் அனைத்து தேசியஇனங்களில் உள்ள இந்துக்களின் திருமணங்களிலும் வேட்டி, சேலைகளே புனிதமான ஆடைகளாகக் காட்சி தருகின்றன.**

ஜீன்ஸ், லெகின்ஸ், டிசர்ட் வணிகத்திலும் தேசிய இனம் போன்ற ஏதோ ஒரு கருத்தாக்கத்தை முன்வைத்து வியாபாரம் நடக்கவே செய்யும். நம்மைப் பொறுத்தவரை அந்த வணிகங்களுக்குப் பின்னால் நம்மை இழிவு படுத்துகிற – நம்மை அடிமையாக வைத்துள்ள இந்து மதத்தின் பின்னணி இருக்கக் கூடாது.

### தோழர் பெரியார் விரும்பிய ஆடைமுறை

அரசியலில் பல்வேறு தளங்களில் இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாட்டை உருவாக்கியவர் பெரியார். பண்பாட்டுத் தளத்தில் இந்து மதத்திற்கும் தமிழர்களுக்கும் பெரும் வேறுபாட்டையும், வளர்ச்சி நோக்கிலான பண்பாட்டையும் முன்வைத்தவர் பெரியார். ஆடைகளிலும் இந்து மதத்திற்கு எதிரான ஒரு முறையை அறிவிக்கிறார்.

“4 முளத்தில் ஓரம் இரண்டையும் சேர்த்து மூட்டி தைத்ததாக எந்த வர்ணம் உள்ள துணியாயிருந்தாலும் அதை இடுப்புக்கும், ஒரு முக்கால் கை சட்டையே மேலுக்கும் உடுக்கும் படியான மாதிரியை பொது உடையாக ஆக்கலாம்.”

– தோழர் பெரியார் 09.11.1930 குடிஅரசு

சுருக்கமாகச் சொல்வதென்றால், கைலி தான் பெரியார் விரும்பிய ஆடையாக உள்ளது. ஆனால் இன்றும் பல பெரியார் தொண்டர்கள் வேட்டி, சேலைகளைக் காப்பாற்றத் துடிப்பதுதான் விந்தையாக இருக்கிறது. வேட்டியையோ, சேலையையோ தொடர்ந்து அணிந்து, பழக்கப்பட்டவர்களுக்கு அதுவே வசதியான உடையாக இருக்கும். பல பகுத்தறிவாளர்கள் அவற்றைத் தொடர்ந்து அணிந்ததால், ‘அணிவதற்கு வசதி’என்ற அடிப்படையில் அணிகிறோம் என விளக்கம் அளிக்கிறார்கள்.

நமது இளமைப்பருவத்திலிருந்து அதிகப்பட்சம் 50 வருடம் நாம் அணிந்து பழகிய வேட்டி, சேலையை நாம் விட முடியவில்லை. ஆனால் பல்லாயிரம் ஆண்டுகளாக தலைமுறை தலைமுறையாகத் திணிக்கப்பட்டு வரும் ஜாதியையும், மதத்தையும் விட்டுவிட வேண்டுமென மக்களிடம் பரப்புரை செய்கிறோம். சிறு மாற்றத்தைச் செய்து கொள்ளக்கூட நாம் தயாராகாமல், மக்களைத் திருத்த நினைப்பது நேர்மையான அணுகுமுறை அல்ல.

ஃபேண்ட், பெர்முடாஸ், கைலி, லெகின்ஸ், ஜீன்ஸ், டிசர்ட் அணிவதை வசதியாகவும், வழக்கமாகவும் கொண்டிருக்கும் பல பெரியார் இயக்கத் தோழர்கள், பொதுவுடைமைத் தோழர்கள், தலித் இயக்கத் தோழர்கள் தங்களது திருமணம், பொங்கல், இல்லத்தின் முக்கிய விழா நாட்களில் வேட்டி, சேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை அணிந்து வருவது, சமுதாயத்தின் வளர்ச்சி நோக்கிய மாற்றத்துக்கு எதிரான செயலாகும். இந்துத்துவப் பொதுப்புத்தியை வளர்க்கும் போக்கு ஆகும்.

இந்தியாவுக்கும், இந்து மதத்திற்கும் எதிரான உடைகள் என்ற பொருளில்தான் பேண்ட், ஜீன்ஸ், லெகின்ஸ், டாப்ஸ், டிசர்ட் போன்ற ஆடைகள் தடைசெய்யப்படுகின்றன. இந்தியாவையும், இந்து மதத்தையும் எதிர்ப்பவர்கள் இந்த நேரத்தில் இந்துச் சமூகத்தின் பொதுப்புத்தியை உடைப்பதைக் கடமையாகக் கருத வேண்டும். நாமும் சமுதாயம் செல்லும் திசையிலேயே பயணிக்கக்கூடாது.

வேத, இந்துமதப் பண்பாடான சேலை, தாவணி, வேட்டி மயக்கங்களிலிருந்து விடுபடுவோம்! ஆண், பெண், அனைத்து பாலினமும் அணிவதற்கு வசதியான – உழைக்கும் எளியவர்களின் உடைகளான – கைலி, பெர்முடாஸ், ஜீன்ஸ், டிசர்ட், லெகின்ஸ், டாப்ஸ், லோயர்ஸ், ட்ராக் சூட்ஸ் அணிவோம்! அதிலும் பெரும் ப்ராண்டட் ஆடைகளைத் தவிர்த்து எளிய தொழில் முனைவோரின் தயாரிப்புகளைத் தேர்ந்தெடுத்து அணிவோம்!




SINGAPORE SHIRTS
SSS EXPORTS
SHIRTS | BANIYANS | SUDITHAR | PANTIES
& FABRIC WHOLE SALE & RETAIL
பேண்ட்....... ரூ.100 முதல்.....
சர்ட்...........ரூ.100 முதல்.....
சேலை........ரூ.100 முதல்.....
சுடிதார் (மெட்டீரியல்) ரூ.100 முதல்.....
சுடிதார் (ஸ்டிச்சிங்)ரூ.100 முதல்....
LS பனியன் (4).........ரூ.100 முதல்.....
குழந்தைகளுக்கான
ஆடைகள் கிடைக்கும்
Mobile : 99942 99466
Valliyammaipudhur Bus Stop,
Nambiyur, Erode -
E-mail : sssexportsss@yahoo.in, sssexportsss@gmail.com

'தழல்' தேன்மொழி
புதுச்சேரி

# ஆகம நெறிகட்டும் – ஆரியத்திற்கும் இந்து வேலையே இல்லை!

இவ்வுலகம் அனைத்து உயிர்களுக்கும் பொதுமையானது. நாம் சரியானவர்களாய், அனைத்து உயிர்களின் உணர்வுகளையும், இயக்க அசைவுகளையும் விளங்கிக் கொள்ளும் ஒரு மெய் மாந்தராயின் எங்கும் செல்லலாம்; எவருடனும் பேசலாம், இயங்கலாம், வாழலாம். ஆனால் இவ்வுலகில் எண்ணத்தக்க போற்றத்தக்க மாந்தர்கள் சிலரே இவ்வுலகத்தால் நிலைப்பாகப் போற்றப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் பொதுமை உணர்வு உள்ளவர்களே.

கிருத்துவ மதமாகட்டும், இசுலாமிய மதமாகட்டும், வேறு அனைத்து மதங்களாகட்டும் அம் மதங்களின் தலைவர்கள் – அம் மதங்கள் அழுத்தமாக இருப்பதன் காரணம் அவர்களின் பொதுமைக் கருத்துக்கள்தாம். மேலும் அக்கருத்துக்களைக் கூறியவர்கள் அனைவரும் மாந்தர்களாக வாழ்ந்து, மக்களை விளங்கியவர்கள்; அவர்கள் கருத்துக்களின் மூலம் இறைவனாகப் போற்றப் பெற்றவர்கள். ஏசுகிருத்து, முகமதுநபி, அறிவர் (புத்தர்), மகாவீரர், குருநானக் இவர்கள் அனைவரையும், தமிழர்களின் அறநூலாகிய திருக்குறளை இயற்றிய வள்ளுவரையும், பகுத்தறிவும், மானமும் மாந்தர்க்கழகு என்று நம்மின் மான உணர்விற்கு எழுச்சியளித்த தந்தைப் பெரியாரையும், அடிப்படை மாந்தராய்ப் பிறந்து ஆரியத்தின் பிடியிலிருந்து சட்டம் இயற்றினாலும் ஆளுமை குறையாமல் சாதி – மதங்களைச் சாடிய அண்ணல் அம்பேத்கர், மொழி இனம் – நாட்டின் விடுதலைக்குத் தம்மை ஈகம் செய்து கொண்ட அண்ணன் பிரபாகரனையும், தமிழ்த்தேசியத் தந்தை பாவலரேறு பெருஞ்சித்திரனாரையும், இந்தியத் தேசியத் தலைவர்களின் தன்மையையும் சூழ்ச்சியையும் அறியாது இந்திய விடுதலைக்குப் போராடி ஏமாற்றமடைந்த ஈக உயர் மாந்தர் வ.உ.சிதம்பரனார் அனைவரையும் நாம் போற்றுகிறோம்.

ஆனால் இந்து மதம் என்ற ஒரு இந்திய மதம் மக்களை வேறுபடுத்தி, மக்களின் பிறப்பை வேறுபடுத்தி, அவர்களின் தொழிலைக் கட்டாயப்படுத்தி எந்த நிலையிலும் முன்னேற்றத்திற்குரிய கல்வி உட்பட அனைத்தையும் தடைப்படுத்தி மக்களுக்குரிய உரிமைய முழுமையாக கையகப்படுத்திய இந்த இழிவு இந்து மதம் வகைப்படுத்தியவாறுதான், அஃதாவது வண்ண ஒழுக்கத்தின்படிதான் (வருணாசிரமம்) அனைத்து மக்களும் இயங்க வேண்டும் என்ற கொடுநிலைகளால் மக்களை ஆட்கொண்டதால்தாம் இந்தியத்து மக்கள் அனைவரும் மதம் மாறி பிளவுபட்டனர். அவர்கள் மாறிக் கொண்ட மதங்கள், அந்த மக்களை அரவணைத்துக் கொண்டன.

இந்துமதத்தில் அடிப்படையான மக்களை அடிமைப்படுத்தி ஆளுமைச் (ஆதிக்கம்) செய்தார்கள் என்றால், அம் மதத்தைப் போற்றிய அடிமைகள் மூடத்தனத்தில் மூழ்கி அடிமை விரும்பிகளாகத் தொழுதேற்றியதாலேயே பஞ்சம் பிழைக்க வந்த ஆரியர்கள் எகிறி மேலமர்ந்து கொண்டு ஆளுமை செய்தனர். எனவே "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்று கூறிய நம்மின் தொல்லியப் பாட்டனார் கணியன் பூங்குன்றனார் கூறியவாறு நாமேதான் நம்மைக் கெடுத்துக் கொண்டோம் என்பதை நாம் ஒவ்வொருவரும் எண்ண வேண்டும்.

ஆரியர்களின் நிறம், மென்மையான அசைவுகள், புரியாத மொழி இவை அனைத்தும் நம்மின் கருநிற வலிய அசைவுகள் – தெளிந்த பொருளுடைய நமக்கு ஒரு மாற்றமான வியப்பளித்தமையாலேயே நாம் மயங்கினோம். நம்மைப் போன்றே நம் அறிவற்ற மற உணர்வுடைய வலிய மன்னர்களும் மயங்கினர். தங்கள் பெண்களை விட்டே நம்மை ஆண்ட அரசர்களை வீழ்த்திய ஆரியர்கள் அன்றிலிருந்து இன்றுவரை பல சூழ்ச்சிகளின் வழி ஏமாற்றிக் கொண்டிருந்தமையை, சூழ்ச்சிகளை அறிந்துதாம் தந்தைப் பெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கர் அவர்களும் ஆரியரல்லாதவர்கள் அனைவரும் விழிப்புற, எழுதினர்; பேசினர்; போராடினர். எனினும் நம் மக்கள் விழிப்புற்றனரா? எள்ளளவேனும் மாறினரா? எத்தனை மூட நம்பிக்கைகளுடன் இயங்கி ஆரியப் பார்ப்பனர்களை வலிவேற்றிக் கொண்டுள்ளனர். எப்படி அவர்களின் கொட்டங்கள் குறையும். நாம் நல்லனவற்றையேதான், பெரியார் கூறியனவற்றையேதான்; அம்பேத்கர் வெளிச்சப்படுத்தியதைத்தான் சம்மட்டி அடிப்பது போல் கூறிக் கொண்டே உள்ளோம். இருப்பினும் நம் மக்கள் மாறிவிட்டார்களா?

100 மடங்கு சாய்க்கடையின் அளவில் ஒரு பங்குச் சந்தனைத்தைக் கொட்டிச் சாய்க்கடையின் நாற்றத்தை மாற்ற இயலாததைப் போன்று, ஆரியக் கொட்டங்கள் நிறைந்த இந்துமத இந்தியாவை, பகுத்தறிவற்றவர்களால் அடக்கிவிட இயலாது. தமிழர்கள் அனைவரும் மட்டுமன்றி இந்திய மக்கள் அனைவரும் ஆரியத்தின் ஒவ்வொரு சிறு-சிறு மென்மையான குற்றமற்றதுபோல் தோன்றும் செயற்பாடுகளின் சூழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் அறிவும் தெளிவும் அனைத்து மொழி இன - நாட்டினர்க்கும் வேண்டும். அவர்களின் செயல்களால் ஏற்படும் எதிர் விளைவுகளை அறியக்கூடிய தொலை நோக்கறிவும் வேண்டும். அவ்வாறான தொலை நோக்குடன் செயற்பட்டவர்கள்தாம் தந்தை பெரியாரும் அம்பேத்கரும். அவர்கள் மறைந்தவுடன் உருவாகியுள்ள ஆரியக் கூத்துக்கள் பல. அவற்றில் ஒரு கூத்துதான் ஆரியப் பார்ப்பினத்தின் ஒரு பகுதியினரே (அர்ச்சகராக) வழிபாடு முறைகளை முதன்மையாக நின்று செய்யத்தக்கவர் என்ற சூழ்ச்சி சட்ட திட்டத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடு.

ஆகம (விதிகள்) நெறிகள் ஆரியரல்லாதவர்கள் அனைவருக்கும் தேவையே இல்லை. ஏனென்றால் ‘இறைமை’ என்ற ஒன்றிருப்பதாகவே நாம் (ஆரியரல்லாத பகுத்தறிவு உணர்வுள்ளவர்கள் ) உறுதியாகக் கருதவில்லை. ‘இறை’ என்ற சொல் ‘தலைமை’ என்ற பொருள்படவே மெய்யறிவாளர்கள் கருதுவர். நம்மை ஆளும் மன்னனுக்கே அல்லது நம்மை வழிநடத்தும் தலைமையனுக்கே ‘இறைவன்’ என்று சொல்லும் வழக்கம் நமக்கு உண்டு. காளி, மாரி என்ற பெண் தெய்வங்களாகக் கொண்டாடும் நமக்கு சிற்றூர்களில் நன்கு வாழ்ந்த நேர்மையான வீரமான, அனைவரையும் காத்து அனைவருக்கும் அரணாக காப்பாக நிற்கின்ற பெண்களை, ஆண்களையே இறைமையராக வழங்கும் வழக்கம் இருந்தது.

நெருப்பு, மலை, மழை, சோறு போடும் வயல்கள் இவையே நம் முன்னோர்களால் வழிபடும் இயற்கை இறைமை வடிவங்கள்; இவற்றிற்கு மொழி தேவையில்லை. மனம் உணர்வுகள்தாம் தேவை. நம் வாழ்விற்கு உயிரூட்டும் ஐம்பூதங்களையும் (நிலம், நீர், வளி, நெருப்பு, வான்வெளி) நாம் நமக்குத் துணையிருக்கும் உயிர் நண்பர்களாகப் பார்த்து, எண்ணுவதே வணங்குவதாகும். அதற்கென்று உட்கார்ந்து கொண்டு, மந்திரங்கள் கூறியவாறு, வேள்வி (யாகம்) செய்யத் தேவையில்லை. எனவே நமக்கு ஆட்கள் தேவையில்லை. மொழி தேவையில்லை. கோயில் போன்ற இடம் தேவையில்லை.

இவ்வாறான மெய்நிலை எனில் நமக்கு எதற்கு பார்ப்பான் என்னும் ஓர் அர்ச்சக ஆள்? எதற்கு ஆகம விதிகள் என்றும் வழிபாட்டு நெறிகள்? பார்ப்பனர் வழிபாடு (அர்ச்சனை) செய்யும் வழிபாடுச் செய்திகள் எதற்கு? அவனின் புரியாத மொழி நமக்கெதற்கு? அவன் என்ன சொல்கின்றான் என்பதையே உணர இயலாத மொழியில் அவன் சொல்லும் மந்திரங்கள் என்ன என்று ஆய்வு செய்கின்ற மூளை எதற்கு? இதற்கான சட்டம் எதற்கு? இந்தச் சட்டம்தான், இவர்கள்தாம் மந்திரங்கள் கூறி வழிபாடு செய்ய வேண்டும், மற்றவர்கள் அவர்கள் முன் அடிமைகளாய், அறிவற்றவர்களாய், முட்டாள்களாய் நின்று வழிபட வேண்டும் என்ற சட்டத் தீர்ப்பு எதற்கு?

எனவே நாம் நம்முள் சிந்திக்க வேண்டும். புரியாத வடமொழியில், இல்லாத கடவுளுக்கு நமக்கும் அந்தக் கடவுளுக்குமாக இடைத் தூதனாக - தரகனாக இருக்கும் பார்ப்பனர் என்னவென்று நமக்காக கூறுகிறார். அவ்வாறு கூறினால் அவை எங்குபோய் சேரும்? அந்தக் கடவுள் என்பவர் எங்கு அமர்ந்து கொண்டு இருக்கிறார்? அவருக்கு வடமொழி மட்டும்தான் தெரியும் என்றால் அந்தக் கடவுள் நமக்கெதற்கு? தமிழும் தெரியுமென்றால் நாமே நேரடியாக அவரிடம் பேசலாமே? இவ்வாறெல்லாம் சிந்திக்காத ஒரே காரணத்தினால்தான் ஆரியப் பார்ப்பனர்கள் சூழ்ச்சியான சிந்திப்பின் உச்சத்தில் இருப்பதாக நாம் எண்ணுகின்றோம். நமக்கு அறிவில்லாததால் அவர்களுக்கு அறிவுள்ளதாக நாம் எண்ணி அவர்களை ‘சாமி’ என்று அழைக்கிறோம். அவர்களுக்குத் தெரியும் சாமி இல்லை என்றும், நாம் முழுக்க முழுக்க சிந்திக்காதவர்கள் அறிவில்லாதவர்கள், ஏமாளிகள் என்றும்.

எனவே முடிவாய் “நமக்கு (பகுத்தறிவுள்ளவர்கட்கு) அர்ச்சகர் தேவையில்லை; கோயில் தேவையில்லை; வடமொழி மந்திரங்கள் தேவையில்லை என்று ஒதுக்கியும், சிந்திக்கின்ற ஆனால் கடவுளை மறுக்காதவர்கள், நாங்களே எங்கள் வீட்டில், எங்கள் மொழியில், எங்கள் விருப்பப்படி எவ்வளவு சொல்ல வேண்டுமோ, எந்த நேரமானாலும், எவ்வளவு நேரத்திற்கும் விரிவு விளக்கமாக நேரடியாக கடவுளிடம் (அவர்கள் நினைக்கும்) சொல்லிக்கொள்வோம்” என்று கூறிவிட்டால் ஆரியத்திற்கு வேலையே இல்லை.

---

**எங்குமில்லாத பார்ப்பனர்கள், எங்குமில்லாத மதம், சாத்திர புராணங்கள், சாதிக் கொடுமைகள், சூத்திரன், பஞ்சமன், பறையன் என்ற கீழ்ச் சாதிகள் இங்குதான் உள்ளன. விஞ்ஞானம் கண்ட உலகத்தில் கூட இல்லை. ஒரேக் கடவுளை கொண்ட மேல் நாடுகளில் இல்லாத விஞ்ஞானச் சாதனங்கள் பல கடவுள்களைக் கொண்ட இந்நாட்டில் ஏன் கண்டுபிடிக்கப்படவில்லை.**

- தோழர் பெரியார், 01.02.1958 விடுதலை.

**உள்ளதைப் பங்கிட்டு உண்பது, உழைப்பைப் பங்கிட்டுச் செய்வது என்ற நிலை ஏற்பட்டால் கடவுளுக்கு வேலையோ அவசியமோ இருக்காது.**

- தோழர் பெரியார்

**எங்கே மக்களில் பார்ப்பான், பறையன் இல்லையோ அங்கே பிறவிச் சமதர்மமும் எங்கே பணக்காரன்-ஏழை இல்லையோ அங்கே சொத்து சமதர்மமும் இருக்கிறது.**

- தோழர் பெரியார், 05.03.1951 விடுதலை

**எந்த ஒரு சமுதாயம் முன்னுக்கு வர வேண்டு மானாலும் முதலில் சாதித் தொழிலை விட வேண்டும். இன்றைக்குச் சாதி இழிவானது தொழிலின் காரணமாகத் தானே உள்ளது.**

- தோழர் பெரியார், 19.08.1965 விடுதலை




சுடரொளி, உடுமலை

# நாமம் போட்டு விட்டுப் போன ராமானுஜர் !

எவையெவற்றிலெல்லாமோ புரட்சி செய்ததைக் கேள்விப்பட்டிருக்கிறோம், பார்த்திருக்கிறோம். மதத்தில் புரட்சி செய்த மகான் என்ற அடைமொழியோடு ராமானுஜர் தொடர் எழுதப்பட்டு, அதுவும் திராவிட இயக்க வழிவந்தவர் என்று சொல்லிக்கொள்பவரால் எழுதப்பட்டு அவரின் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டு வருகிறதை இப்போது பார்க்கிறோம். மதம் என்பதே ஒரு பித்தலாட்டம். இதில் புரட்சி வேறு. மதத்தில் அப்படி என்னதான் புரட்சி செய்தாரோ, அது கிடக்கட்டும்.

என்னதான் 3 சதம் இருக்கிற பார்ப்பனர்களின் வாக்குகளையும், அவர்களின் அடிவருடிகளின் வாக்குகளையும் ஈர்ப்பதற்காக இதைச் செய்தாலும், தலைகீழாக நின்றாலும் எப்படி அவர்கள் இந்த சூத்திரர்களுக்கு வாக்களிப்பார்கள்? வாக்கு வங்கி அரசியலுக்காக, தான் பின்பற்றி வந்ததாகக் கூறிய திராவிட இயக்க(பகுத்தறிவு)க் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு எப்படி இப்படியெல்லாம் செய்யத் தோன்றுகிறதோ அவருக்கு?

காலமெல்லாம் ஜாதி ஒழிப்புப் பேசி, பரப்பி- ஜாதியொழிப்புக்கு எதிராக இருக்கும் பார்ப்பனர்களுக்கு எதிராகப் பேசி வந்த பெரியாரைப் பற்றி எங்கு நம்மைப் போன்றவர்கள் படம் எடுத்துவிட்டால் என்னாவது என்பதற்காக படத்தில் ஓரிடத்தில்கூட பார்ப்பனர், பார்ப்பான் என்ற சொல் வந்துவிடாமல் கவனமாக அவாள்களால் எடுக்கப்பட்ட பெரியார் திரைப்படத்தில் இன்னும் சேர்க்க வேண்டிய காட்சிகள் நிறைய உண்டு. ஆகவே பெரியாரைப் பற்றி முழுமையாக வரும் தலைமுறை அறிந்து கொள்வதற்காகப் பெரியாரைப் பற்றியோ, திராவிடர் இயக்கங்கள், நீதிக்கட்சியின் தொண்டுகளைப் பற்றியோ தொடர் எழுதி, ஒளிபரப்பியிருந்தால் நலம். அதைவிடுத்து இப்படி ஒரு தொடர் இந்த நேரத்தில் அவசியமா என்ற கேள்வி எழுகிறது. அதுவும் அவாள்கள் அனைவரும் மிகவும் தெளிந்த தமிழில் பேசுவது, இன்றைய இளைஞரிடையே தவறான ஒரு கண்ணோட்டத்தை, பார்ப்பனர்கள் அப்படித்தான் இருந்தார்கள் என்ற தோற்றத்தை உருவாக்கி விடும் என்பதே உண்மை.

இந்த நேரத்தில் ராமானுஜரைப் பற்றி பெரியாரின் கருத்தென்ன என்பது பற்றி, தோழர் மயிலைநாதன் எழுதிய ‘பெரியார் ஒரு நடைச்சித்திரம்’ நூலில் இவ்வாறு கூறுகிறார்,

1958 ஆம் ஆண்டு இது நிகழ்ந்தது. நான் எழுதிய ‘பூவுலக சொர்க்கம்’ என்னும் நாடகத்திற்குத் தலைமை தாங்கிச் சிறப்பிக்கும்படி சில நண்பர்களுடன் சென்று பெரியாரிடம் கேட்டேன். தனிநாடு கோரிக்கையை அந்த நாடகத்தின் பாத்திரங்களின் வாயிலாக நான் எள்ளி நகையாடி இருப்பதை பெரியாரிடம் மறைக்காமல் சொன்னதால், முதலில் ‘பார்க்கலாம்’ என்று தலை அசைத்தவர், இறுதியில் தலைமை தாங்க மறுத்துவிட்டார்.

முதலில் 'பார்க்கலாம்' என்று அவர் தலை அசைத்ததற்குக் காரணம் உண்டு. அந்நாடகத்திற்கு முதலமைச்சர் காமராசரும், பழம்பெரும் தேசபக்தர் மதுரை சிதம்பர பாரதியும் வருவதற்கு இசைந்திருக்கிறார்கள் என்பதால்தான் முதலில் கலந்து கொள்ளலாம் என்று அவருக்குத் தோன்றியது. பெரியார் இறுதியில் வர மறுத்துவிட்டதால், காமராசர் தலைமை தாங்கி, சிதம்பர பாரதி நாடகத்தைப் பாராட்டிப் பேசினார்.

அந்த நாடகத்தில் ஒரு கட்டத்தில் வைஷ்ணவ மதத் தலைவராசன இராமானுஜரைப் பாராட்டிப் பேசுகிற கட்டம் ஒன்று உண்டு. அதாவது, இராமானுஜர் சாதி ஒழிப்பில் தீவிரமாக இருந்தவர் என்று பெரியாரிடம் நான் பேசுகிறபோது குறிப்பிட்டேன்.

அதைக் கேட்டதும் பெரியாருக்கு சிரிப்பு வந்தது. "நான் இராமானுஜர் ஒரு பார்ப்பனர் என்பதற்காகத்தான் அவரைப் பாராட்டுவது இல்லை" என்று ஒருவர் தம்மிடம் குறைபட்டுக் கொண்டதாக பெரியார் தமது பேச்சைத் துவக்கினார். எனது கருத்தும் அதுவாகத்தான் இருக்கும் என்பதால்தான், அந்தத் திசையில் பேச்சைத் துவக்கினார்.

"இராமானுஜரின் நல்ல எண்ணத்தை நான் குறை சொல்லவில்லை. அவருடைய போதனைகளை அவருடைய நடைமுறைகளே கொன்றுவிட்டன " என்று கூறி முதலிலேயே ஒரு அணுகுண்டை வீசினார்.

"அவர் போதனைகளும் நடைமுறைகளும் அறிவுபூர்வமாக இருந்து இருக்குமானால், அவரைப் புகழ்ந்த துதிபாடி வருகிற கூட்டத்திடம் ஒருசிறு அளவுக்காவது சாதி ஒழிப்பு உணர்வு, அல்லது சாதி பேதமற்ற உணர்வு வளர்ந்து இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உணர்வு அய்யங்கார்களிடம் இருக்கிறதா?" என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

"இராமானுஜர் இன்னொரு கேட்டையும் செய்தார். வைஷ்ணவ மதாச்சாரியார் என்று பெரிதும் மதிக்கப்படுகிற இராமானுஜர் 11 வது நூற்றாண்டில் வாழ்ந்தவர். அந்த மதத்திற்கு அதற்கு முன்பு நெற்றியில் குறியிடுகிற வழக்கமில்லை. அவர்தான் முதன்முதலில் தனது மதத்தைச் சார்ந்தவர்கள் நெற்றியில் நாமம் போட்டுக் கொள்ள வேண்டும் என்கிற விதியை ஏற்படுத்தினார்" என்று பெரியார் கூறியவுடன் எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அப்படியா, அய்யா" என்று நாங்கள் ஆச்சரியத்துடன் வினவினோம்.

"ஆமாம், நான் என்ன கற்பனை செய்து பேசுகிறவனா? அதுதான் வரலாறு. என் குடும்பம் வைஷ்ணவ குடும்பம், எங்களுக்குப் பல விஷயங்கள் தெரியும். வைஷ்ணவ பரிபாஷையில் சொல்ல வேண்டுமானால், 'திருமண்' என்று அதனைக் குறிப்பிடுவது வழக்கம்.

"அதுவும் ஒரு வகை மண்தான். அது மைக்கா இனத்தைச் சேர்ந்த மண். அந்த மண்ணை மைசூர் மாநிலத்தில் (இப்போது கர்நாடக மாநிலம்) உள்ள மேல் கோட்டைப் பகுதியில்தான் பூமியிலிருந்து பரல் பரலாக வெட்டி எடுக்கிறார்கள். அந்த மண்ணை எடுத்துத் தண்ணீர் நிறைந்த தொட்டிகளில் சில நாட்கள் வரை ஊற வைக்கிறார்கள். அது ஊறிப் பதமான பிறகு அதைக் கரைத்து, அதிலுள்ள கல், மண், வண்டல் ஆகியவற்றை வடிகட்டி அகற்றுகிறார்கள். நீர் வற்றிய பிறகு எஞ்சியுள்ள தூய மண்ணைப் பிசைந்து தேவையான அளவுகளில் கையினாலோ, அச்சினாலோ உருவாக்கி உலர்த்தி நாமக்கட்டிகளாக விற்பனை செய்கிறார்கள். இப்போது கேட்டுப் பாருங்கள், "பகவானே, தனது நெற்றியில் ஆதி காலத்தில் அணிந்திருந்தான்" என்று சிலர் உளருவார்கள். "சாதி ஒழிக்கப் புறப்பட்டவர் நமக்கு கடைசியில் நாமம் போட்டுவிட்டுப் போனார்" என்று கூறிச் சிரித்தார்.

"இராமானுஜரால் சாதி ஒழியவில்லை. அதற்கு மாறாக அவர்களுக்குள்ளாகவே இரண்டு சாதிகள்தான் தோன்றின. Y நாமம், U நாமம் என்று ஊர் ஊரக்குக் கட்சி கட்டிக் கொண்டு கோர்ட்டுகளில் அலைந்து திரிகிறார்கள். வெள்ளைக்கார நீதிபதிகள் இவர்களைக் கண்டு சிரித்தார்கள்" என்று கூறி பெரியார் மீண்டும் சிரித்தார்.

பெரியார் ஏன் சிரித்தார் என்று அவர் வழியில் வந்ததாகச் சொல்லிக் கொள்பவருக்குத் தெரிந்தால் சரி.. ஆனால் இவர் செய்கையைப் பார்த்து ஊரே சிரிக்கிறது.

**நன்கொடை**

**உடுமலை தோழர் சுடரொளி**
**தனது பிறந்த நாள் (02.01.2016)**
**நன்கொடை காட்டாறு க்கு ரூ 1000 வழங்கினர்.**

## கோடியில் பா.ச.க. பயிற்சிப் பள்ளி

பா.ச.க.வினருக்கு பயிற்சி அளிக்க, மும்பை அருகே ரூ11 கோடியில் பயிற்சிப் பள்ளியை அக்கட்சி அமைந்துள்ளது.

இப்பள்ளியில், மகாராஷ்டிர மாநில பா.ச.க.வினருக்கு மட்டுமே பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு, விடுதி, தனி பங்களா வசதிகள் உள்பட அனைத்து வசதிகளும் உள்ளன.

பதினைந்து ஏக்கர் பரப்பளவில் அனைத்து வசதிகளும் உள்ளன. ராம்போ மாளிகை அகாதெமி என்று பெயரிடப்பட்டுள்ளது. பணிகள் முடிந்து விரைவில் இப்பள்ளி செயல்பட உள்ளது.

பா.ச.க.வினருக்கு அமைப்பு ரீதியான பயிற்சி உள்பட பல்வேறு பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்படும். உதாரணமாக, தலைவர், செயலர், இணைச் செயலர் போன்றவர்கள் பதவிகளில் நியமிக்கப்பட்டால் எவ்வாறு செயல்பட வேண்டும். கட்சியின் வளர்ச்சிக்கு எந்த வகையான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும், பொதுமக்களிடம் கட்சியின் புகழை எவ்வாறு பரப்ப வேண்டும் என்பது உள்பட பல்வேறு நிலைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

–தினமணி, டிச.26,1999

துரைச்சாமி முத்து
உசிலம்பட்டி

# ஜல்லிக்கட்டில் ஜாதி

நான் சத்தியமாக புளுகிராஸ்காரன் இல்லை என்பதை முதலில் தெளிவுடன் தொவித்துக்கொள்கிறேன். மாட்டைபற்றிச் சத்தியமாக எனக்கு எவ்விதக் கவலையும் இல்லை. இந்த சல்லிக்கட்டு வேண்டாம் என்று நான் எண்ணுவதற்குக் காரணம்,

1. சல்லிக்கட்டில் மானம், வீரம் என்கிற பெயரில் வெட்டியாகச் சாவதும், நிரந்தர ஊனப்படுவதும் தொடர்ந்து ஏதிலிகளே.

2. இதில் வெட்டிப் பவிசும், சாதியும் நிரம்பியுள்ளது.

3.சரக்கைப் போட்டுவிட்டு நீ சண்டியராடா மாப்ளன்னு சொல்லி அவனை செல்லாக்காசாக்குகிறமாதிரி, மாடுகளோடு மல்லுக்கட்டுவதை மானம், வீரமென்று மட்டையைக்கட்டி, ஒருதரப்பை நிரந்தர அடியாளாக வைக்க நினைக்கும் ஆதிக்கசக்திகளின் சூட்சுமம் இதிலிருக்கிறது.

தற்போது சல்லிக்கட்டில் சாதி உள்ளது என்கிற எனது கருத்தை மட்டும் இந்த பதிவின்மூலம பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

சக மனிதனை இழிவு செய்யும் எந்தப் பவிசாக இருந்தாலும் (இனமானமோ, சாதிமானமோ தமிழ்பண்பாடோ எந்த மயிராக இருந்தாலும்) அதைப் பகுத்தறிவுள்ள ஒரு மனிதன் தனக்கான அவமானமாகவே கருதுவான்.

ஒருவாரத்திற்கு முன் எனது ஊரில் இறந்துபோன எனது ஒன்று விட்ட அண்ணன் ஒருவரின் இறுதி நிகழ்ச்சியில் இடுகாட்டில் உடலைக் குழிக்குள் இறக்குமுன் அண்ணன் தம்பிகள் எல்லாம் மண்ணை பிறங்கையில் தள்ளுங்கப்பா என்று சொன்னார்கள். அவ்வாறே பலரும் தள்ளினார்கள். இடையில் எங்கள் அறியாத்தனமாக அவர் நமக்கும் அண்ணன்தானே என்று நினைத்து ஊரிலுள்ள சலவைத் தொழிலாளியின் மகனும் (பல வருடங்கள் சென்னையில் வேலை நிமித்தம் வசித்துவருபவர்) மண்தள்ளவந்தார். ஊரில் காரியத்தனம் பண்ணும் புடுங்கிக்கு வந்ததே கோபம், கடும் சத்தத்துடன் ஏய்....... என்னடா செய்யிர தாயோலி... ஊரைவிட்டுப்போனால் பழக்க வழக்கமெல்லாம் மறந்துபோகுமா என அடிக்கவரவே நான் அவரை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டேன்.

செத்த பிணத்திலும் சாதி இருக்கிறபோது சல்லிக்கட்டில் சாதி எப்படி இல்லாமல் போகும். சாதி மனித மனங்களில் அகலாதவரை சகலத்திலும் வியாபித்திருக்கும் என்பதே உண்மை.

நான் உசிலம்பட்டிக்காரன். என்னிடம் சல்லிக்கட்டு என்றால் என்ன என்று தெரியுமா? என எந்தப் புடுங்கியும் கேட்கமுடியாது. எனக்கு விபரம் தெரிந்த நாள்முதல் எதற்கென்றே தெரியாமல் என் வயதுக்கேற்றபடி சின்னக் கன்றையோ, பெரிய மாட்டையோ மாட்டுப்பொங்கலன்று எங்கள் ஊரில் அனைந்திருக்கிறோன். இப்படி அந்தந்த ஊரில் அவரவர் விருப்பப்படி நடத்தப்பட்டதுதான் முதலில் ஏறுதழுவுதல்.

இன்றைக்கும் இனிமேல் என்றைக்கும் எங்கள் ஊர் மாட்டை எங்கள் ஊருக்கு பக்கத்திலிருக்கிற பள்ளவீட்டுக்காரனோ (பொருமாள்கோவில்பட்டியைப் பள்ளவீடு என்று அழைக்க எங்கள் இனமானத்தால் சிறுவயதுமுதல் பழக்கப்படுத்தப்பட்டோம்) சக்கிலிய வீட்டுக்காரனோ (உண்மையான ஊரிபெயர் கோணியம்பட்டி) வந்து தொட்டுவிட முடியாது. இதன் அர்த்தம் என்ன என்று சல்லிக்கட்டில் சாதி இல்லை என்று சொல்லும் பதறுகள் இங்கு வந்து பதில் சொல்லவேண்டும்.

என் ஊரில் மட்டுமல்ல தென்மாவட்டங்களிலுள்ள பலபல ஆதிக்கசாதி கிராமங்களில் நடக்கும் நிறுவனப்படுத்தப்படாத அந்த ஊராரினால் மட்டும் நடத்தப்படுகிற ஏறுதழுவுதலில் ஆதிக்கசாதிக்காரனின் மாட்டை எந்த தலித்தும் தொட்டுவிட்டால் தலை உருளும். அலங்காநல்லூரிலும், பாலமேட்டிலும் நடப்பது படிப்படியாக நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள சல்லிக்கட்டு. அலங்காநல்லூரிலும் சில ஆண்டுகளுக்கு முன்புவரை எந்த ஆதிக்கசாதிக்கரனின் மாட்டையும் தாழ்த்தப்பட்ட சாதிக்காரன் தொட்டுவிட முடியாது. அவ்வாறு தொட்டால் மாடு குத்தியதுபோல் அவனை குத்தி கொன்றுவிடுவதற்கென்று மாட்டோடு 10, 20 ஆட்களையும் வேல் கம்புகளுடன் அழைத்து வந்ததை நான் அறிவேன். தொடர்ந்து இதுகுறித்து விமர்சனம் எழுந்தபின்பு இப்போது நிறுவனமயப்படுத்தப்பட்ட சல்லிக்கட்டில் மட்டும் (அரசு கட்டுப்பாட்டுடன் நடத்தப்படுகிற சல்லிக்கட்டில் மட்டும்) மட்டுப்பட்டுள்ளது.



# ஜல்லிக்கட்டு தமிழர் பண்பாடா?

சு.விஜய பாஸ்கர்

கடந்த ஒரு வாரமாக இணையதளங்களில், அச்சு ஊடகங்களில், தொலைக்காட்சிகளில் அடித்த ஜல்லிக்கட்டு அலை, மத்திய அரசு ஜல்லிக்கட்டிற்கான தடையை நீக்கிய பின்னர் ஓய்ந்திருக்கிறது.

1.அப்படியெனில் தமிழ் நாடு முழுவதும் ஜல்லிக்கட்டு நடைபெறாதது ஏன்?
2.மதுரையைச் சுற்றியுள்ள சில மாவட்டங்களில், மேலும் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கலந்து கொள்வது ஏன்?
3.ஜல்லிக்கட்டு தமிழர் பண்பாடு எனில் மாடு மேய்ப்பது ஆப்பிரிக்கப் பண்பாடா?
4. ஜல்லிக்கட்டு தமிழர் பண்பாடு என்று குதிக்கும் கலாச்சாரக் காவலர்கள் மாடு மேய்ப்பதை இழிவாகக் கருதுவது ஏன்?
5. பழைமையான பழக்கவழக்கம், ஏனவே ஜல்லிக்கட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற அளவுகோலை மற்றைய பழைய பழக்க வழக்கங்களுக்கும் பொருத்தி பார்க்கலாமா?
6. கோமணம் கட்டுவது தானே தமிழரின் பழைய பழக்கம். அதைப் பின்பற்ற எத்தனை கலாச்சாரக் காவலர்கள் தயாராக உள்ளனர்?
7).பழையது என்ற ஒரே காரணத்திற்காக இன்றைய நவீன அறிவியல் யுகத்திற்குப் பொருந்தாத பழக்கவழக்கங்களை அனுமதிக்க முடியுமா?
8. 2014 ஆண்டு மே மாத்ததில் ஜல்லிக்கட்டு தடை செய்யப்பட்டு விட்டது. கடந்த ஆண்டுகளில் அமைதியாக இருந்து விட்டுத் தற்போது ஜல்லிக்கட்டிற்கு ஆதரவாக பாஜக களமிறங்குவது ஏன் ?
2016 தமிழக சட்டசபைத் தேர்தலைத்தவிர வேறு காரணங்கள் ஏதும் இருக்க முடியுமா?
9. ஸ்பெயின் போன்ற நாடுகளில் காளைச்சண்டை உள்ளதே என்பவர்கள் உலகில் நடைபெறும் மாற்றங்களை அறிந்து கொள்வதில்லை. ஸ்பெயினில், ஜெர்மனியில் காளைச்சண்டையை நிறுத்தி ஆண்டுக்கணக்காகி விட்டன.
10. பழமைதான் என்பதற்காக தமிழ்நாட்டில் மாட்டு வண்டியில் பயணம் செய்ய நாம் தயாரா?
அறிவியலுக்கும், நடைமுறைக்கு ஒவ்வாத எந்த வித பழக்கமும் காலப்போக்கில் வழக்கிழந்து போக வேண்டும்.
பண்பாடு என்பது பழைமைகளை தூக்கிப்பிடிப்பதல்ல, மாறாகப் பண்படுதல் என்றே பொருள்.

# கொம்புகளும் குடுமிகளும்

- மலரினியன்

பார்ப்பன மயிர்களுக்கு
பளபளப்பை ஏற்படுத்த
சிலதமிழ்த்தேசிய வெண்ணெய்கள்
விளையாடுவதே சல்லிக்கட்டு

முந்துதிராவிட இனத்தாரை
வந்துகுந்தி ஏய்த்துவிட்ட
தொந்திக்கார பார்ப்பானின்
இந்துமதப் பண்பாடே சல்லிக்கட்டு

உயிருள்ள உயர்பெண்மகளை
உயிரற்றபொரு ளாக்கிபந்தயத்தில்
வைத்தாடும் ஆணாதிக்கமோங்கும்
அழிவுநிலைப்பண்பாடே சல்லிக்கட்டு.

கொம்புகள்பிடித்து வீரம்காட்டாமல்
தெம்புடன்படித்து முன்னேறிநாம்
ஆந்திர,கேரளம் போல்அறிவுடன்
அசுரவேகத்துடன் முன்னேறிக்காட்டு.


வேதியன் குடுமிகளுக்கிருக்கும்
மதிப்பினைக்கூடப் பெறாதநாம்கல்வி,
சாதிஇட ஒதுக்கீடுதன்னைப்பெற்றே
மோதிஅவன் ஆதிக்கத்தை அடிக்கிக்காட்டு.



Dr.பெரியார்செல்வி



# கசப்பான இனிப்பு நோய்



Sir Edward Albert-sharpey Schafer

எப்போதோ படித்த கவிதையிது
சர்க்கரை –
வீட்டிலும் இல்லை.
உடம்பிலும் இல்லை.

ஆம் கடந்த காலங்களில் பணக்கார நோயாக இருந்த சர்க்கரை நோய் இப்போது எல்லாத் தரப்பு மக்களையும் ஆக்கிரமித்து உள்ளது. தற்போது 40 வயது கடந்தவர்களிடம் தேநீர் கொடுக்கப்படும் போது கேட்கப்படும் கேள்வி சர்க்கரை சேர்க்கலாமா? என்பதே அப்படிப்பட்ட சர்க்கரை நோயைப் பற்றிப் பார்ப்போம் வாருங்கள்.

**சர்க்கரை வியாதி என்பது என்ன?**

நம் உடலில் கணையத்தில் சுரக்கும் இன்சுலின் எனும் திரவத்தின் குறைபாடு தான் சர்க்கரை அல்லது நீரிழிவு நோய் என கூறப்படுகிறது. இது ஒரு நோய் என்பதைவிட ஒரு 'குறைபாடு' என்பதே சரியாக இருக்கும்.

**இன்சுலின் குறைவதால் என்ன பிரச்சனை?**

இந்த இன்சுலின் என்ற திரவம் இரத்தத்தில் குளுகோஸின் ( ஒரு வகை சக்கரை ) அளவைக் கட்டுப் படுத்துகிறது. நாம் உணவு உட்கொண்ட பின் இரத்தத்தில் உள்ள குளுகோஸை ஆற்றலாக மாற்றுகிறது. சர்க்கரை நோயாளிகளுக்கு இன்சுலின் அளவு குறைவதால் இரத்தத்தில் குளுகோஸ் அளவு அதிகமாகிப் பிரச்சணை வருகிறது.

**சர்க்கரை நோயின் வரலாறு**

பல்வேறு அறிகுறிகளால் அறியப்பட்ட சர்க்கரை நோயை ( சிறுநீரை எறும்புகள் அரிப்பது போல பல வகை ) பற்றித் தீர்க்கமாக 1910 ல் SIR EDWARD ALBERT-SHARPEY SCHAFER என்ற ஆங்கில மருத்துவர் கணையம் பற்றிய ஆராய்ச்சியில், அதில் சுரக்கும் ஒரு வகைத் திரவத்தைக் கண்டுபிடித்து அதற்கு 'இன்சுலின்' என்று பெயரிட்டார்

இன்சுலின் என்ற இலத்தின் சொல் அதாவது இலத்தினில் INSULA என்றால் ISLAND. கணையத்தை சுற்றி திரவம் சுரப்பதால் அதைத் தீவு போல் பாவித்து அத்திரவத்திற்கு இன்சுலின் என பெயரிட்டார்.

1916 ல் ELLIOTT JOSLIN- MD மருத்துவர் சர்க்கரை நோயைப் பற்றிய முதல் புத்தகத்தை வெளியிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். 1923 ல் ELILILLY & CO செயற்கையாக இன்சுலின் தயாரித்து வணிக முறையில் கொண்டு வந்தனர். ( PROTAMNE INSULIN) புரத வடிவத் திரவத்தை NOVO NORTISK ன் 1936 ல் அறிமுகம் செய்தார்கள். 1924 ல் மகப்பேறு காலத்தில் தாய்மார்களுக்கு சர்க்கரை நோய் வருவதைக் கண்டுபித்தனர். 1949 ல் RACHMIEL LEVINE – MD இன்சுலின் என்பது செல்லிற்கு குளுகோஸை எடுத்து செல்கிறது என்பதைக் கண்டுபிடித்தார். 1964 ல் THE AMES என்ற நிறுவனம் முதன் முறையாக சக்கரையின் அளவைக் கண்டுபிடிக்க COLOUR CODING STRIPE கண்டுபிடித்தனர். அதே நிறுவனம் 1970 ல் குளுகோ மீட்டரை அறிமுகம் செய்தனர். 1979 ல் NATIONAL DIABETES DATA GROUP DEVELOPS சக்கரை வியாதியை நான்கு வகைப்படுத்தினர்.

வகை 1 கணைய செயல்பாடு குறைவதால் வருவது

வகை 2 இன்சுலின் சுரப்பது போதுமானதாக இல்லாததும் மற்றும் அதன் திறன் குறைவாக உள்ளதும்

வகை 3 மகப்பேறு காலத்தின் சர்க்கரை நோய்

வகை 4 மற்ற வகை நோய்கள் மூலம் சர்க்கரை நோய்

1990 லிருந்து 2015 வரை இந்தியாவின் சர்க்கரை நோயாளிகள் எண்ணிக்கை 123 சதவிகதம் அதிகரித்துள்ளது, அதற்கு காரணமாகப் பெரும்பாலும் சொல்லப்படுவது வாழ்வியல் முறை மாற்றம் ( LIFE STYLE ). இவ்விடத்தில் தான் இயற்கை வியாபாரிகள் தன் மூக்கை அதிகபட்சமாக நுழைத்துள்ளனர். நம்மில் பெரும்பான்மையோர் சர்க்கரை நோயாளிகளாக ஆனது எப்படி? இதன் பின்னல் உள்ள அரசியல் என்ன? நம் நோயை யார் தீர்மானிக்கிறார்கள்? நம் மருந்தை யார் தீர்மானிக்கிறார்கள்?

– வரும் இதழ்களில்









பெயர்சூட்டலில் தொடங்கி, மொட்டை அடித்தல், காது குத்துதல், பூப்புனித நீராட்டு விழா, காதல், ஜாதி மறுப்புத் திருமணம், தாலி மறுப்பு, ஆண், பெண் விடுதலைக்கு எதிரான பிள்ளைப் பேற்றைத் தவிர்த்தல், இணையருடன் சுயமரியாதையுடன், உரிமையுடன் வாழ்தல், இறப்பிலும் சடங்குகளை மறுத்தல் என ஒருசில பண்பாட்டுக் கூறுகளை மட்டும் நாட்காட்டியில் அடையாளப்படுத்தியுள்ளோம். தொடர்ச்சியாக பெரியாரின் திராவிடர் பண்பாட்டின் பல்வேறு பரிணாமங்களை விளக்கமாக அறிமுகப்படுத்துவோம்.

திராவிடர் கழகத் தலைவர் மானமிகு தோழர் கி.வீரமணி அவர்கள் 04.01.16 அன்று பல்லடத்தில் திராவிடர் கழக விழா ஒன்றுக்கு வந்தார். அப்போது தோழர் ஜோதிவேலு - கௌரி ஆகியோரின் அழைப்பை ஏற்று அவர்களது இல்லத்துக்கு திராவிடர் கழகத் தலைவரும், அவரது துணைவியார் மானமிகு தோழர் மோகனா அம்மையாரும் வருகை தந்தனர். அவர்களுடன் திராவிடர் கழகப்பொதுச்செயலாளர் தஞ்சை.இரா.ஜெயக்குமார், பேராசிரியர் காளிமுத்து உட்பட திருப்பூர், கோவை மாவட்ட திராவிடர் கழகப் பொறுப்பாளர்களும், தோழர்களும் வருகை தந்தனர்.

அங்கு காட்டாறு குழுவினர் திராவிடர்கழகத் தலைவரையும் தோழர்களையும் சந்தித்து திராவிடர் பண்பாட்டு நாட்காட்டியை வழங்கினர். நாட்காட்டியை முழுமையாகப் படித்த திராவிடர் கழகத் தலைவர், காட்டாறு ஏடுகளைத் தவறாமல் படிப்பதாகவும், இதழ்களும், திராவிடர் பண்பாட்டு நாட்காட்டியும் சிறப்பாக உள்ளன என வாழ்த்துக்களைக் கூறினார்.

'தலித்முரசு' ஆசிரியர் தோழர் புனிதப்பாண்டியன் அவர்கள், "பண்பாட்டுத்தளத்தில் இது மிகச்சரியான முயற்சி, நாட்காட்டியின் கருத்துக்களும், அவற்றைச் சொன்ன விதமும் ( வடிவமைப்பு ) ஒன்றுக்கொன்று போட்டி போடும் விதத்தில் அமைந்துள்ளன. பண்பாட்டுப் புரட்சியை தம் வாழ்விலேயே நடைமுறைப்படுத்திய எளிய தோழர்களையே ரோல் மாடல்களாகக் காட்டியதும் மிகப் பொருத்தமான செயல்" என வெகுவாகப் பாராட்டினார்.

அதேபோல, திராவிட இயக்கத் தமிழர் பேரவை விழாவுக்காக பல்லடம் வந்திருந்த அந்த அமைப்பின் தலைவர் பேராசிரியர் தோழர் சுபவீ அவர்களுக்கும் நாட்காட்டி வழங்கப்பட்டது. பண்பாட்டுத்தளத்தில் செய்யப்படும் இந்த முயற்சியை அவரும் வெகுவாகப் பாராட்டினார். இதுபோல பல அமைப்புகளைச் சார்ந்த தோழர்களும், நண்பர்களும் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். அனைவருக்கும் காட்டாறு குழுவின் மனமார்ந்த நன்றி.

